பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 21 சனிக்கிழமை 06.03.2021 கதிர் 121

**இனிது ரகசியம் அல்ல!**

வடக்கு, கிழக்குத் தொடர்பில் தென்னிலங்கையில் இறக்கை கட்டிப் பறக்கும் வதந்திகளுக்கு குறைவிருப்பதில்லை. சமூக ஊடகங்கள் தத்தம்பாட்டில் உருவாக்கி விடும் இந்தக் கதைகள் கை, கால் வைத்து பேயுருக்கொண்டதெற்கு முழுவதையும் ஒரு பக்கம்02

# புலிகளைப் புகழ்வோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை; எம்.பி. பதவியைக் கூட இரத்துச் செய்யவும் ஆலோசனை

## கோட்டா அரசு பகிரங்க அறிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பற்றி ஆதரித்துப் பேசினாலோ அல்லது விடுதலைப் புலிகளின் நினைவுதினங்களை அனுஷ்டித்தாலோ அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும் சட்டங்கள் விரைவில் கொண்டுவரப்படவுள்ளன.

– இவ்வாறு பொதுமக்கள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நாடாளுமன்றத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்து பேசினால் அவர்களின் எம்.பி. பதவியைக் கூட இரத்துச் செய்யும் விதத்தில் நடவடிக்கை எடுக்கவும் ஆராயப்படுகின்றது.

ஜேர்மனியில் எவ்வாறு நாஸி கட்சி பற்றியோ, ஹிட்லர் பற்றியோ பேசினால் அங்கு எவ்வாறு கடுமையான சட்ட 2

# சத்தம் இன்றி இருந்துவிட்டு ஐ.நாவில் இலங்கையை ஆதரிக்குமாம் இந்தியா

## இப்படி நம்புகின்றார் அமைச்சர் வீரசேகர



இந்தியா எப்போதும் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் இப்போது அமைதியாக இருந்தாலும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது எமக்குச் சாதகமாகவே முடிவு எடுப்பார்கள்.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். 2

# மேலும் நால்வர் சாவு; கொரோனா காவு 493

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

கேகாலையைச் சேர்ந்த 39 வயது ஆண், கொழும்பு - 08 ஐச் சேர்ந்த 67 வயது ஆண், கொழும்பு - 10 ஐச் சேர்ந்த 81 வயது ஆண் மற்றும் இராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 84 வயது பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்துநாட்டில்கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 493 ஆக அதிகரித்துள்ளது.

## அரசின் பயணம் ஆரோக்கியமானதல்ல

# மியன்மாரைப் போல் மோசமான நிலை இலங்கையிலும் ஏற்பட்டுவிடக்கூடாது!

## முன்னாள் சபாநாயகர் கரு எச்சரிக்கை



இன்று மியன்மாரில் நடந்து கொண்டிருக்கும் ஜனநாயக விரோத செயற்பாடுகள் நாளை எமது நாட்டிலும் நடந்துவிடக் கூடாது.

- இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

அதேநேரம் இன்று இலங்கை அரசின் பயணம் 2

# சர்வதேசத்தைத் திரட்டி இலங்கையை அழிக்க லசந்தவின் மகள் முயற்சியாம்

## அரசு கடும் குற்றச்சாட்டு



'சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைக்கு இலங்கை அரசு நீதியைத் தராமல் மறுத்து வருகின்றது என அவரது மகள் அகிம்ஸா விக்கிரமதுங்க வொஷிங்டன் போஸ்ட் இதழுக்கு எழுதியிருந்த கட்டுரையை அரசு கடுமையாக விமர்சித்துள்ளது.

இலங்கைத் தலைவர்கள் மீது பயணக் கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விதிப்பதற்காக சர்வதேச சமூகத்தை திரட்டி இலங்கையை அழித்து அதன் வீழ்ச்சியைப் பார்ப்பதற்கு அகிம்ஸா விக்கிரமதுங்கவும் மேலும் பலரும் முயற்சிக்கின்றனர் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் 2

# ஓட்டமாவடியில் நேற்று மாத்திரம் ஒன்பது ஜனாஸாக்கள் அடக்கம்!



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என்று சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய நேற்று மாலை முதலாவது ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டதுடன் நேற்றிரவு 8.30 2

## யாழ். கார்கில்ஸ்

# திரையரங்குக்குக் கடந்த இரண்டு வாரங்கள் சென்றவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர் கார்கில்ஸ் கட்டடத்தில் உள்ள திரையரங்குக்குக் கடந்த இரண்டு வாரங்கள் திரைப்படம் பார்ப்பதற்குச் சென்றவர்களில் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் உள்ளோரைத் தொடர்புகொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

காய்ச்சல், தொண்டை நோ, தடிமன், தும்மல் போன்ற அறிகுறிகள் உள்ளோர் தாம் வசிக்கும் பிரதேசத்தைச் சேர்ந்த சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அல்லது வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் 24 மணிநேர சேவையான 021 2226666 என்ற தொலைபேசி இலக்கத்துடன் 2

# யாழில் ஆசிரியை உட்பட வடக்கில் மேலும் 20 பேருக்குக் கொரோனா!

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 20 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 12 பேர் மன்னாரிலும், 8 பேர் யாழ்ப்பாணத்திலும் கண்டறியப்பட்டனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 304 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் எவருக்கும் தொற்று இல்லை என அறிக்கையிடப்பட்டது. 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கலக்கு கலக்கி அடிக்கும்.

வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகளில் நீதியரசர் விக்னேஸ்வரனின் தோற்றம் வித்தியாசமானது. வெண்ணிறத் தாடி, நெற்றியில் துலங்கும் திருநீறு, சந்தனம், குங்குமம், வேட்டி, நஷனல், உத்தரியம் என்று எப்போதும் சைவப் பழமாகவே அவர் காட்சி தருவார். அவரைப் பார்த்தோ என்னவோ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூட இப்போது வெள்ளைத் தாடிக்கு மாறிவிட்டார்.

இதேசமயம், இலங்கையில், 'இலங்கை பாரதீய ஜனதாக் கட்சி' என்ற பெயரில் ஒரு கட்சியை ஆரம்பிப்பது குறித்து பேச்சடிபட்டது வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம். அது பற்றி இந்தப் பத்தியிலும் பிரஸ்தாபித்திருந்தேன். கொழும்பில் வதியும் முத்துச்சாமி எனும் வர்த்தகர் இதற்காக முயற்சியை ஆரம்பித்துள்ளார். அதற்கு, இந்து சமயப் பேரவையின் செயலாளர் சக்தி கிரீவன், இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றோரின் ஆசீர்வாதம் உண்டு. அந்தக் கட்சியை உருவாக்குவது பற்றிய பேச்சு அரசல் புரசலாக அடிபடுகின்றது.

அவ்வளவுதான். தெற்கு சமூக ஊடகங்கள் தமக்குள் கற்பனை பண்ணிக் கொண்டன. நீதியரசர் விக்னேஸ்வரன் சைவப்பழமாகக் காட்சி தருகின்றமையால் அவரே இலங்கை பாரதீய ஜனதாக் கட்சியையும் ஆரம்பிக்கப் போகின்றார் என்று முடிச்சுப் போட்டுக் கொண்டன. பிறகென்ன? வதந்தி கொளுந்து விட்டு எரியத் தொடங்கியது.

நீதியரசர் விக்னேஸ்வரன் தாமரைப்பூச் சின்னத்தில் புதிய இந்துத்துவக் கட்சியைத் தொடங்கப்போகின்றார் என்ற செய்தி தென்னிலங்கை சமூக ஊடகங்களில் இரட்டை இயந்திரம் போட்ட விமானம் போல பறந்து பரவி வருகின்றது.

பாவம் நீதியரசர் விக்னேஸ்வரன். 'பொங்கல்' பானைச் சின்னத்தில் தாம் ஆரம்பித்த தமிழ் மக்கள் கூட்டணியின் பதிவுக்காக நேற்று வரைத் தீவிரமாக ஓடித்திரிகின்றார். போதாக்குறைக்கு பெருக்குத் தாம் ஏற்றுக் கொண்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணித் தலைமை வேறு. அதற்குத் தாம் பயன்படுத்தும் சுரேஷ் பிறேமச்சந்திரனின் கட்சியின் மீன் சின்னம். இந்த இரண்டும் போதாது என்று இப்போது தாமரைப் பூவுடனும் அவரது பெயரைக் கொண்டு போய்ச் செருகின்றனர்.

தாமரை மொட்டைச் சின்னமாக வைத்திருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷக்கள் விக்னேஸ்வரனுடன் சண்டைக்கு வராவிட்டால் சரி...!

★ ★ ★

அவர் ஒரு போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு அதிகாரி. முகப் பழக்கம் உண்டு. ஒரு பத்திரிகையாளர் என்று என்னை மதிப்பவர். பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்.

கொரோனாவால் தங்கள் 'தொழில்' பாதிக்கப்பட்டு விட்டது என்ற கவலை அவருக்கு. அது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. அது பற்றிக் கேட்டேன்.

எல்லாம் முகக் கவசத்தால் வந்த வினை என்றார்.

எனக்கு விளங்கவில்லை. முகக் கவசத்துக்கும் அவரது பணிக்கும் என்ன தொடர்பு என்பது எனக்குப் புரியவில்லை. முகக் கவசத்தால் என்ன பாதிப்பு என்று கேட்டேன்.

*"முன்னெல்லாம் மது அருந்தி விட்டு வாகனம் செலுத்துவோரை இலகுவில் மடக்கி விடுவோம், தொலைபேசி கதைத்துக் கொண்டு கார், மோட்டார் சைக்கிள் ஓட்டுவோர் பலர் தாராளமாகச் சிக்குவர். முகக் கவசம் வந்ததால் எல்லாம் பாதிப்பு. வழக்கமாக சாரதிகளை மறித்ததும் அவர்களை நெருங்கிப் போய் உரையாடுவோம். அவர்கள் குடித்திருந்தால், வாயைத் திறந்து பதில் கூறியதுமே கப்பென்று அடிக்கும் மணம். அதை வைத்து ஆளை மடக்கி விடுவோம். இப்போது முகக் கவசம் போட்டிருப்பதால் பெரும்பாலும் மணக்காது. நாங்களும் முகக் கவசம் அணிந்திருப்பதால் மணத்தை நாம் அறிவதற்கான தடை இரண்டு மடங்கு. அவர்களை நெருங்கி நின்று கொண்டு முகக் கவசத்தை கழற்றுமாறு நாங்களும் அவர்களைக் கேட்க முடியாது. நாங்களும் எங்கள் முகக்கவசத்தை நீக்க முடியாது. இதனால் குடித்து விட்டு வண்டி ஓட்டும் பலர் எங்களிடம் சிக்காமல் டிமிக்கி கொடுத்து விடுகின்றனர். அதனால் எங்கள் வருமானமும் படுத்துவிட்டது. அது போலத்தான் கைத் தொலைபேசி கதைத்துக் கொண்டு வாகனம் செலுத்துவதும். கைத் தொலைபேசியை முகக் கவசத்துக்குள் மறைத்து வைத்த படி அவர்கள் பேசிக் கொண்டு வாகனம் செலுத்துகின்றனர். எங்களால் அவர்களை இலகுவில் அடையாளம் கண்டு மறிக்க முடிவதில்லை"* – என்று பெரும் விசனம் தெரிவித்தார் அவர்.

கொரோனாவால் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான சிக்கல், பிரச்சினை. பாவம் போக்குவரத்துப் பொலிஸார். அவர்களின் வருமானத்துக்கும் இப்படி ஆப்படித்து விட்டது கொரோனா...!

– மின்னல் –

## சர்வதேசத்தைத் திரட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அட்மிரால் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

இதேவேளை, புலம்பெயர் குழுக்கள் மற்றும் எதிரணி அரசியல்வாதிகள் உள்ளிட்ட சில தரப்பினர் அகிம்ஸா விக்கிரமதுங்கவை இயக்குகின்றனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரான ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை சவால்களை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் லசந்தவின் மகள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது துரதிஷ்டவசமானது.

குற்றவாளிகளை ஒருநாள் நீதிமன்றத்தில் நிறுத்தி நீதி வழங்கும் முயற்சியில் அகிம்ஸா வெற்றி பெறுவதற்காக வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம் – என்றார்.

வொஷிங்டன் போஸ்ட் இதழுக்கு அகிம்ஸா விக்கிரமதுங்க எழுதியுள்ள கட்டுரையில்,

2007–இல் பாதுகாப்புச் செயலாளராகக் கோட்டாபய ராஜபக்ஷ இருந்தபோது நடந்த ஆயுதக் கொள்வனவின்போது 10 மில்லியன் டொலர் ஊழல் நடந்திருப்பது பற்றி எனது தந்தை லசந்த விக்கிரமதுங்க வெளிப்படுத்தியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ அவரை அவதூறு குற்றச்சாட்டில் நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றார். பின்னர் எனது தந்தையின் பதிப்பகம் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

குறித்த ஆயுத ஊழல் தொடர்பில் எனது தந்தையிடம் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படுவதற்கு சில வாரங்களே இருந்த நிலையில், 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி எனது தந்தை பணிக்குச் சென்று கொண்டிருக்கும்போது இராணுவப் புலனாய்வாளர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

கோட்டாபய ராஜபக்ஷவையே அதற்கு நான் பொறுப்பாளியாக்குகின்றேன் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வெற்றி பெற்று விட்டதால், தனது தந்தையின் படுகொலைக்கு நீதி கோரும் முயற்சிகள் வெற்றியளிக்காத நிலை நீடிக்கின்றது எனவும் அந்தக் கட்டுரையில் அகிம்ஸா தெரிவித்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளும் சாட்சியங்களும் ராஜபக்ஷ அரசால் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன எனவும் அகிம்ஸா தனது நீண்ட கட்டுரையில் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளைப் புகழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதோ அதேபோன்று இலங்கையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஏனென்றால் தமிழீழ விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டாலும் கூட அவர்களின் கொள்கை இன்னமும் அரசியல் ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரதிநிதிகள் இன்றும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். எனவே, இவற்றைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது – என்றார்.

## மியன்மாரைப் போல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆரோக்கியமானதல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் நிகழ்காலச் செயற்பாடுகள், மாகாண சபைத் தேர்தலுக்கான நகர்வுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

சுயாதீன ஆணைக்குழுக்கள் மீது அரசியல் தலையீடுகள் ஏற்பட ஆரம்பித்து விட்டன. இவ்வாறான நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது.

சுயாதீனம் என்ற பெயரில் மறைமுகமான அரசியல் அதிகாரம் ஒன்று இயங்கிக்கொண்டுள்ளது. அதிகார மோகத்தில் செயற்படும் ஒரு சிலர் அரசியல் தலைவர்களின் நோக்கங்களுக்கு இடமளிக்கக் கூடாது. நீதிமன்ற சுயாதீனம் கூட இன்று பாரிய சவாலுக்குட்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்தோடு நாட்டின் சுயாதீனத்தைக் கேள்விக்குட்படுத்தும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றிய சிலருக்குத்தான் இன்று மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவை தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பலமாகக் குரல் எழுப்ப வேண்டும்.

இதேவேளை, மியன்மார் இன்று மிக மோசமான ஜனநாயக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயகத்துக்கான புரட்சியில் பல நூறு பேர் இப்போது வரையில் கொல்லப்பட்டுள்ளனர். அங்கு ஜனநாயகப் புரட்சி ஒன்று வெடித்துள்ளது.

இன்று மியன்மாரில் நடந்துகொண்டிருக்கும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் நாளை எமது நாட்டிலும் நடந்துவிடக் கூடாது – என்றார்.

## திரையரங்குக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் கட்டடத்தொகுதியில் உள்ள திரையரங்கில் பணியாற்றும் 7 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்டது. அதையடுத்து திரையரங்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அந்தத் திரையரங்குக்கு கடந்த இரண்டு வாரங்களாகச் சென்றவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று பரவியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அதனாலேயே யாழ்ப்பாணம் மாநகர் கார்கில்ஸ் கட்டடத்தில் உள்ள திரையரங்குக்குக் கடந்த இரண்டு வாரங்கள் திரைப்படம் பார்ப்பதற்குச் சென்றவர்களில் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் உள்ளோரைத் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## ஓட்டமாவடியில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மணிக்கு ஒன்பதாவது ஜனாஸாவும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மஜ்மா நகரில் கொரோனாத் தொற்று மூலம் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கொரோனாவால் மரணித்தவர்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன.

கொரோனாத் தொற்று மூலம் மரணித்த ஜனாஸாக்களில் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஒருவர், காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவர், அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவர், சாய்ந்தமருதைச் சேர்ந்த மூவர், கோட்டமுனையைச் சேர்ந்த ஒருவர், ஏறாவூரைச் சேர்ந்த இருவர் என மொத்தம் ஒன்பது ஜனாஸாக்கள் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டன.

## சத்தம் இன்றி இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியா எவ்வாறான நடவடிக்கை எடுக்கும் என்ற கேள்வி பல தரப்பினராலும் எழுப்பப்பட்டு வருகின்றது. இப்போது தமிழகத்தில் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் அவர்களின் உள்ளக அரசியல் நகர்வுகள் காணப்படும்.

யார் வலியுறுத்தினாலும் போர்க்குற்றங்கள் தொடர்பில் எந்தவொரு விசாரணையையும் நடத்த இடமளிக்கமாட்டோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரும் பிரேரணை மீது நடத்தப்படும் வாக்கெடுப்பில் நாம் தோற்றாலும்கூட சர்வதேச நாடுகள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை வழங்கப்போவதில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் முன்வைத்த அறிக்கை பொய்களால் தயாரிக்கப்பட்ட ஓர் அறிக்கையாகும். இந்த அறிக்கையை நாம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

பிரேரணையை நாம் நிராகரிப்பதாகத் தெரிவித்த பின்னரும் எமக்கு ஆதரவாகப் பல நாடுகள் குரல் கொடுத்துள்ளன. பிரதான நாடுகள் எமது பக்கம் உள்ளன என்பது எமக்குத் தைரியமளிக்கின்றது – என்றார்.

## யாழில் ஆசிரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 457 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 20 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட நவாலியைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆசிரியை ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இவர் நவாலியில் கடந்த வாரம் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட ஆசிரியையுடன் பஸ்ஸில் முல்லைத்தீவுக்குச் சென்று திரும்பியவர்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மெலிஞ்சிமுனையில் 6 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் கடந்த சில நாள்களுக்கு முன் இறுதிச்சடங்கு ஒன்றில் பங்குபற்றியவர்கள்.

இதேவேளை, மன்னார் நகரிலுள்ள கொமர்ஷல் கிரடிட் நிதி நிறுவனத்தில் 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும், மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரி சபையில் பணியாற்றும் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்கள் இருவரும் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள்.

மன்னார் மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதேவேளை, மன்னார் நகரிலுள்ள சிகையலங்கரிப்பு நிலைய தொற்றாளர்களுடன் தொடர்புடைய இருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது – என்றார்.

# இந்தியா ஐ.நாவில் கொடுத்த அழுத்தமே இங்கு தேர்தல் பற்றிய பேச்சுக்குக் காரணம்

## கிரியெல்ல தெரிவிப்பு



அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா வலியுறுத்தியமையின் காரணமாகவே, அரசாங்கம் அண்மையில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அறிவித்தது என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் கூறியுள்ளதாவது –

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக தற்போது கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் மாகாணசபை தேர்தல் நடத்தப்படுமா என்பது சந்தேகமேயாகும்.

அதாவது, ஐக்கிய நாடுகள் சபையை சமாளிப்பதற்காகவே மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கருத்துக்கள் தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றன.

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என ஐ.நாவில் இந்தியா அழுத்தம் பிரயோகித்துள்ளது. இதன் காரணமாகவே மாகாணசபை தொடர்பாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆனால்தற்போதையசூழ்நிலையில், அரசாங்கம் தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் இல்லை. இதன் காரணமாகவே தேர்தலை காலம் தாழ்த்துவதற்காக புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவினூடாகவேபுதியஅரசமைப்புஉருவாக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது அரசாங்கத்துக்கு சார்பான சட்டத்தரணிகள் ஊடாக அரசமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது முறையற்ற செயற்பாடாகும். 13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கத்துக்குள் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அரசாங்கத்துக்குள்ளும் இணக்கப்பாடு இன்றியே புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறிருக்கையில் எவ்வாறு எம்மால் யோசனைகளை முன்வைக்க முடியும்? இந்த முறைமையை நாம் எதிர்க்கின்றோம்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய விமானப் படைத் தளபதி பிரதமர் மஹிந்தவுடன் சந்திப்பு!





இந்திய விமானப் படைத் தளபதி எயார் ராகேஷ் குமார் சிங் பதாவுரியா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை விமானப் படையின் 70 ஆவதுஆண்டுநிறைவுக்கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக இந்திய விமானப் படைத் தளபதி இலங்கை வந்துள்ள நிலையில் கடந்த வியாழக்கிழமை அலரிமாளிகையில் வைத்து பிரதமரை சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கைக்கு தொடர்ந்து பாதுகாப்பு உதவிகளை வழங்கப்போவதாக இந்திய விமானப் படைத் தளபதி உறுதியளித்துள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் நீண்ட கால பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பேணி வருகின்றன. இது சமுத்திரவியல் பாதுகாப்பு, போதைப்பொருள் கடத்தலை முறியடித்தல் போன்ற பல்துறை சார்ந்ததாக விஸ்தாரம் பெற்றுள்ளது. இந்த ஒத்துழைப்பைமேலும்விரிவுபடுத்தலாம் என இந்திய விமானப் படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

# மேலதிகமாக மின்சாரத்தை கொள்வனவு செய்யத் தீர்மானம்!

மின்சாரத்துக்கான கேள்வியை பூர்த்தி செய்வதற்காக, மேலதிகமாக மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜனயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக, குறித்த யோசனை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் கீழ் 128 மெகா வாட் மின்சாரம் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வடக்கில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

வடக்கு மாகாணத்தில் மேலும் 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணத்தில்அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதேஅவர்இவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் கடந்த வியாழக்கிழமை, 309 பேரின் மாதிரிகள், பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 7 பேர், யாழ்ப்பாணம் – ஹார்கில்ஸ் கட்டடத் தொகுதியிலுள்ள திரையரங்கில் பணியாற்றும் பணியாளர்கள். அந்த திரையரங்கில் பணியாற்றுபவருடன் தொடர்புடைய ஒருவருக்கு தொற்றுள்ளமையை அடுத்து திரையரங்கு கடந்த இரண்டு நாளாக மூடப்பட்டுள்ளது.

அங்கு பணியாற்றுபவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்ட நிலையில், பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 7 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஒருவர் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டறியப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையவர்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே தொற்றாளருடன் தொடர்புடையவர். மற்றொருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பயிலும் மாணவர் ஒருவர். அவர் காத்தான்குடியிலிருந்து வருகை தந்த நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த வியாழன், 451 பேரின் மாதிரிகள், பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 3 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. ஏனைய இருவர் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள். அவர்களில் ஒருவர் குழந்தையைப் பிரசவித்த தாயார். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தவக்காலச் சிந்தனை



கலாபூஷணம் செ.யோசப்பாலா

# மனமாற்றத்தின் தூதுவராவோமா?

ஆடுகளை மேய்க்கும் இடையனின் முயற்சியில்தன்னிடமுள்ளதொண்ணூற்றுஒன்பது ஆடுகளை விட தவறிச் சென்ற ஓர் ஆட்டை தேடிச் சென்று அலைந்து கண்டு கொண்ட பின் ஏற்படும் மகிழ்ச்சிக்கு நிகர் ஏதுமில்லை.

இவை இன்று பல தவறான வழிகளால் தவறிச் செல்லும் மைந்தர்கள் தவறான பாதையில் சென்று தன்மானம் இழந்து, தன் குடும்பத்தையும், தனது சமூக சூழலுக்கும் இழுக்கைத் தேடி தன்னை அழித்துக் கொள்ளும் இளம் சமூகத்தை கண்டும் காணாதவர்களாகவும் தவறான வழிகளில் களவு, வழிப்பறிகள் அடாவடித்தனங்களும் பல இடங்களிலும், குடும்பங்களிலும் அதிகரித்து வருவது யதார்த்தமாகின்றது.

இதற்குத் துணை போவோராக களவு, கொள்ளையில் பெறும் பொருள்களை மலிவுஎனவாங்கிஊக்கப்படுத்துவோரும், போதை வியாபாரிகளும், இதற்குத் துணை போகும், குடும்பங்கள் களவு, கொள்ளை பொருள்களைப் பெற்று மகிழ்வோரும் லஞ்சம் பெற்று பாதுகாக் கும் தூண்டிகளாலும் தவறிச் செல்லும் இளையோர் போதைக்கு அடிமையாவதற்கு பங்காள ராக மாறுவோரும் அன்றைய சிலுவை சாவுக்கு உடந்தையான மக்கள் கூட்டத் தில் ஒருவராகவே உணர முடியும்.

தவறிச் செல்லும் இளையோரை தேடிச் சென்று சமூகத்தில் பொறுப்புள்ளோராக மாற்ற முயலும் அர்ப்பணிப்பாளர்களின் வேையாளராக முன்வருவோரே இன்றைய தேவையாகும். குடி, போதை, களவு, கொள்ளை, கொலைகளுக்குத் துணைபோவோராக இருப்போரும் மனமாற்றம் பெற்று தவறிச் செல்லும் இளையோரை காப்பாற்றும் துணைக்கரங்களாக அந்த ஓர் ஆட்டை கண்டுகாப்பாற்றிய இடையனாக உங்கள் செயல்களால்புதுவாழ்வுபுதுப்பயணத்தை நல்வழிகாட்டும் தூதுவராக உங்களால் மாற முயன்றால் இதுவும் இறைதேடலின் தவப் பயணங்கள்தான். இவை வழிபாட்டை வாழ்வாக்கும் செயல் களே.

தவறும், இளம் உள்ளங்கள் தாமாக மாற முயன்றாலும் ஏற்றுக் கொள்வார்களா எம்மை, என்ற ஏக்க அச்சத்தால் அந்தரிப்போர் அதிகமாக உள்ளனர்.

இதுபோன்ற ஓர் செயலே நற்செய்தியால் தரப்படுகின்றது. ‘என் தந்தையின் கூலியாட்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்கு பசியால் சாகிறேன். நான் புறப்பட்டு என் தந்தையிடம்போய், அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதி அற்றவன். உம்முடைய கூலியாளில் ஒருவராக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்.’ என்று சொல்லிய மகன் போன்று உங்கள் எதிரே காண்பவரை மனமாற்றம் பெறச்செய்யும் உங்கள் செயல்கள் கூட ஒரு ஆலயம் கட்டி எழுப்புவதற்கு சமமாகும் இதனை செயல்படுத்த இத் தவப் பயணத்தில் நாம் தயாரா இதுவே சிலுவைப் பாதையின் தவப் பயண்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## காத்திருக்கின்றது பாடம்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க முக்கிய விடயம் ஒன்றைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*"ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால் பாரதூரமான விளைவுகளை நாடு எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம்"* – என்று அவர் எச்சரித்துள்ளமை மிக முக்கியமான விவகாரமாகும்.

சரி, பிழை என்னவாக இருந்தாலும், உலகில் மனித உரிமைகளைப் பேணும் 'சாம்பியன்' தானே என்ற எண்ணத்தில்தான் செயற்படுகின்றது உலக பொலிஸ்காரரான அமெரிக்கா.

அந்த நாடு பிரிட்டன், கனடா, ஜேர்மனி போன்ற வலிமையான மேற்குலக நாடுகளை ஒன்று திரட்டியபடி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகக் கொதித்தெழுந்துள்ளது.

நீதி, நியாயம் கொழும்பின் பக்கம் இல்லை. அப்படி இருந்தாலும் கூட, இந்த விடயத்தில் அமெரிக்கா உட்பட்ட வலுவான மேற்குல நாடுகளுடன் முட்டிமோதி காரியம் பார்ப்பது என்பது மலையுடன் மோதும் விவகாரம்தான். புத்திசாதுரியமாக – தந்திரோபாயமாக – மதிநுட்பத்துடன் – சாணக்கியமாக – கையாள வேண்டிய விவகாரம்.

இலங்கைத் தீவில் பௌத்த, சிங்களப் பேரினவாதக் கிளர்ச்சி மூலம் தாம் பெற்றிருக்கும் வலிமை அமெரிக்கா உட்பட்ட நாடுகளுடன் முட்டி மோதிக் காரியம் பார்க்க உதவும் என்று கொழும்பு நினைக்குமானால் அது நிச்சயம் பட்டவர்த்தனமாக முட்டாள்தனம்தான். அதில் இரண்டு விதமான கருத்துக்கு இடமேயில்லை.

வலுவான மேற்குலகு இலங்கைக்கு எதிராகப் பிரேரித்திருக்கும் இந்தப் பிரேரணை, இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களுக்கு முழுமையாகத் திருப்தியைத் தராத ஒன்றாக இருக்கலாம். ஆனால், யுத்த காலத்தில் கொழும்பு புரிந்த அடாவடித்தனம், யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை உலகம் கண்டு கொள்ளாமல் விடாது என்பதற்கு இந்தப் பிரேரணை வலுவான சாட்சியம்.

இந்த விடயத்தில் முரண்டு பிடித்து – நீதி, நியாயமான விசாரணைக்கு இடைஞ்சல் விளைவித்து – உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை பகிரங்கப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு – பொறுப்புக் கூறல் நிலைநாட்டுவதைத் தடுத்து – இழப்பீடுகளை வழங்காமல் இழுத்தடித்து – மீள நிகழாமையை உறுதி செய்ய மறுத்து – கொழும்பு நிற்குமானால் விளைவுகள் விபரீதமாகும் என்பது தெளிவு.

இது விடயத்தில், மேற்குலகு எடுத்த எடுப்பில் கொழும்பு அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லாமல் இருக்கலாம். அதற்குக் காலம் இழுபடலாம்.

ஆனால், அதற்காக இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டவுடன் எல்லாம் முடிந்து விட்டது, நாம் இனிப் பெருமூச்சு விட்டு ஆறுதலாக இருக்க முடியும் என்று கொழும்பு எண்ணக் கூடிய நிலைமை இருக்காது என்பது தெளிவு.

*"ஐ.நா. பிரேரணை மூலம் இலங்கைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. அந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேறினாலும், நாம் அதைக் கண்டு கொள்ள மாட்டோம்"* – என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் றியர் அட்மிரல் சரத் வீரசேகரா சொல்வது போலவும் நிலைமை இல்லை என்பதுதான் யதார்த்தம்.

இந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேறினால் உடனடியாக இலங்கை விடயம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றுக்குப் போய் விடாது.

ஆனால், அதற்காகக் கொழும்பு ஆசுவாசமாக – அலட்டிக் கொள்ளாமல் – ஆறுதலாக – இருக்கவும் அந்தத் தீர்மானம் விடாது.

ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டமை போல யுத்தக் குற்றங்கள் புரிந்த படை அதிகாரிகளுக்கும், அதற்குக் காரணமாகவிருந்த அரசில் தலைவர்களுக்கும் எதிராக சொத்து முடக்கம், பயணத் தடை என்பன நிச்சயமாக வரும். அதையும் தாண்டி பொருளாதார ரீதியான பல தடைகளை, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இலங்கைக்கு எதிராக மேற்குலகு நிச்சயமாக விதிக்கும்.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை மீண்டும் விலக்குவதில் தொடங்கி இலக்கு வைக்கப்பட்ட பல பொருளாதார முடக்க நடவடிக்கைகளை மேற்குலகம் பிரயோகிக்கும். இத்தகைய கெடுபிடி நடவடிக்கைகளை எடுத்து, எதிரித் தரப்புகளை மடக்கி, அடிபணிய வைக்கும் கைங்கரியத்தில் அமெரிக்கா பெயர் போனது.

ஆக, மேற்குலகைச் சீண்டும், முரண்டு பிடிக்கும் கொழும்பின் கொழுப்புத்தனத்துக்குச் சரியான பாடம் ஜெனிவா அமர்வின் பின்னரும் தொடரும் என்பது நிச்சயம்.

# இலங்கையின் எல்லை பாதுகாப்பில் இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம்!

## விமானப்படை தளபதி தெரிவிப்பு



இலங்கையின் எல்லைப் பாதுகாப்பில் இந்தியாவின் ஒத்துழைப்புகள் மிகவும் அவசியம். ஆகவே அதனை கட்டாயம் பெற்றாக வேண்டும் என விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இலங்கையில் இடம்பெற்று வரும் விமானப்படை கூட்டு கண்காட்சிகள் குறித்தும் இந்திய விமானப்படையை இணைத்துக்கொண்டமைக்கான காரணம் குறித்தும் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இலங்கையின் விமானப்படை பலவீனமானது என்பதே உண்மையாகும். எமது தாக்குதல் சக்தி 20 வீதத்திற்கும் குறைவானதாகும்.

மேலும், இலங்கையின் பிராந்திய நாடுகளாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பசுபிக் எல்லையில் பலமான அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புகள் எமக்கு கிடைத்து வருகின்றன. எனினும் இலங்கையின் எல்லையை பாதுகாக்க வேண்டுமானால் இந்தியாவுடன் இணைந்தே செயற்பட வேண்டும்.

ஆஸ்திரேலியாவும் கடல் எல்லை பாதுகாப்பில் எம்முடன் இணைந்து செயற்படுகின்றது. அதேபோன்று இந்தியாவின் ஒத்துழைப்புகள் எமக்கு வேண்டும்.

இதேவேளை, இலங்கையின் விமானப் படை, கடந்த காலங்களில் பலவீனமாக காணப்பட்டது. எனினும் இப்போது அரசாங்கம் புதிய வேலைத்திட்டங்களை உருவாக்கி விமானப்படைகளை பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றது.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கையின் நாடாளுமன்ற விவாதம் ஒருநாள் மட்டுமே!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பாக எதிர்க்கட்சியால் நாடாளுமன்றத்தில் 3 நாள் விவாதம் கோரியிருந்த போதும் ஒரு நாள் மாத்திரம் விவாதிக்க கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 9ஆம் திகதி கூடவுள்ள நிலையில் அந்த வாரத்துக்கான சபை நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இதன்போதே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆளும் கட்சியால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணையாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை விவாதத்துக்கு எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை கடந்த மாதம் 23ஆம் திகதி சபாநாயகருக்கு கையளிக்கப்பட்டமையை அடுத்து, மறுநாள் 24 ஆம் திகதி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அதனை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருந்தார்.

சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அறிக்கையை சபைக்கு சமர்ப்பிப்பதாக அறிவித்தமையைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து, குறித்த விசாரணை அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் 3 நாள் விவாதம் தேவை. அதனை வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அதற்கு சபாநாயகர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுதொடர்பாக கலந்துரையாடி விவாதத்துக்குரிய நாள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பதிலளித்திருந்தார்.

இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய கட்சித் தலைவர்களின் குழுக்கூட்டம் சபாநாயகர் தலைமையில் கூடியபோது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பான நாடாளுமன்ற விவாதத்துக்கு எதிர்வரும் 10ஆம் திகதி ஒருநாள் மாத்திரம் வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

# பிளாஸ்டிக் இறக்குமதி; கோப் குழு பரிசீலனை!

பிளாஸ்டிக் இறக்குமதி, பாவனை மற்றும் பாவனையின் பின்னரான விடயங்கள் தொடர்பாக சுற்றுச்சூழல் கணக்காய்வு அறிக்கை எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப்) கலந்துரையாடப்படவுள்ளது. இது தொடர்பாக இலங்கை நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையிலான கோப் குழு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 8 அரச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மார்ச் 23 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட லங்கா மினரல் ஸண்ட்ஸ் நிறுவனம் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளதுடன், மார்ச் 24 ஆம் திகதி புதிய ஏற்றுமதி வலயத்தை நிறுவும் செயன்முறையை மதிப்பீடு செய்யும் செயல்திறன் அறிக்கை தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

மார்ச் 26 ஆம் திகதி பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டப்படிப்பின் கல்வி நிறுவனம் தொடர்பில் ஆய்வு செய்யப்படவுள்ளது.

ஏப்ரல் 06 ஆம் திகதி புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளதுடன், ஏப்ரல் 7 ஆம் திகதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அழைக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 20 ஆம் திகதி தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பில் விசாரணை செய்யப்படவுள்ளது.

மேலும், ஏப்ரல் 21 மற்றும் 23 ஆம் திகதிகளில் முறையாக மக்கள் வங்கி மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியன கோப் குழு முன்னிலையில் அழைக்கப்படவுள்ளன.

# இராணுவச் சோதனைச் சாவடியால் மக்களுக்குக் கடும் அசௌகரியம்!

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் செல்வம் எடுத்துரைப்பு



மன்னார், மார்ச் 06

மன்னார் பிரதான பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடியால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துரைத்துள்ளார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்றதுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம், மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமேலின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

இதில், ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.திலீபன், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், வட மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், பிரதேசச் செயலாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், பாதுகாப்புப் படை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, குடிதண்ணீர், விவசாயம், கடற்தொழில், கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதேவேளை, மன்னார் பிரதான பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடியால் மக்கள், அரச பணியாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக நாடாளுமன்றஉறுப்பினர்செல்வம்அடைக்கலநாதன் தெரியப்படுத்தினார்.

அதாவது, சோதனைச் சாவடிகள் உள்ளமை தொடர்பாக எவ்விதப் பிரச்சினைகளும் இல்லை. ஆனால், குறித்த சோதனைச் சாவடி அமைந்துள்ள பகுதியே ஒரு பிரச்சினையாக உள்ளது. மக்களின் பொழுது போக்கு இடமாகக் காணப்பட்ட குறித்த இடத்தில் இராணுவச் சோதனைச் சாவடி அமைந்துள்ளது. இதனால், மக்கள் அந்த இடத்திற்குச் செல்லமுடியாத நிலை காணப்படுகிறது.

மேலும், அரச கடமைகளுக்காகச் செல்லும் பணியாளர்கள் குறித்த சோதனைச் சாவடியில் நிறுத்தப்படுகின்றனர். அவர்களின் மோட்டார் சைக்கிள் கழற்றப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இதனால், அவர்கள் உரிய நேரத்துக்கு கடமைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினூடாக ஒரு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறுகின்ற அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளும் அப்பிரதேச சபையின் அனுமதியுடனேயே நடைபெற வேண்டும்.

எனினும், மன்னார் பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் நடைபெறுகின்ற சில அபிவிருத்திச் செயற்பாடுகள் எமது அனுமதியின்றியும், எமது கவனத்திற்குக் கொண்டுவராமலும் இடம்பெறுகின்றன. எனவே, இனிவரும் காலங்களில் மன்னார் பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று உரிய முறையில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென மன்னார் பிரதேச சபையின் தலைவர் எஸ்.எச்.எம்.முஜாகிர் வலியுறுத்தியுள்ளார்.

# வானிலையில் இன்று முதல் திடீர் மாற்றம்!

நாட்டில் தற்போது நிலவும் வறட்சியான வானிலை இன்று (சனிக்கிழமை) முதல் மாற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் –

நாட்டில் தற்போது நிலவும் வறட்சியான வானிலை மார்ச் 6 ஆம் திகதியிலிருந்து மாற்றமடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது.

கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் சிறிதளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்று மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிள் திருட்டு; ஈடுபட்ட சந்தேக நபர் கைது!

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபரை பொலிஸார் அரலகங்வில பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

78 வயதுடைய முதியவர் ஒருவரே இந்தக் குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபர் ஆவார்.



இதன்போது அவர் திருடிய 17 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

ஆரம்பகட்ட விசாரணைகளில் அவர் திருடிய பல மோட்டார் சைக்கிள்களை ஏனையவர்களுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிளில் வந்தவரை காரால் மோதித் தள்ளிக் கொலை!

நாரம்மல – பஹமுன பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த நபரை காரால் மோதச் செய்து, கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்தமை தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹமுன பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை கார் ஒன்றில் வந்த நபர் இரு மோட்டார் சைக்கிள்களுடன் மோதச் செய்து, மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார் எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

உயிரிழந்த நபர் சந்தேக நபரின் மனைவியுடன் காதல் தொடர்பு கொண்டுள்ளமையுடன், இது தொடர்பில் சந்தேக நபருக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வந்துள்ளார்.

பின்னர் இருவருக்குமிடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளமையுடன், இதன்போது ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்குமாறு சவால் விடுத்துள்ளனர்.

அதற்கமைய, உயிரிழந்த நபரும், இன்னும் சிலரும் இணைந்து சந்தேக நபரை சந்திக்க மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

காரில் வந்த சந்தேக நபர் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும்மோதச்செய்துள்ளமையுடன், இதன்போது கீழே விழுந்திருந்த சந்தேக நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

நாரம்மல – கிலின்பொல பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளமையுடன், பஹமுன பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் நாரம்மல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதலுக்கு நீதி வழங்குவதில் அரசு பெருந்தோல்வி

## ஜெ.சி.அலவத்துவல எம்.பி. சாடல்

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறி ஆட்சியை கைப்பற்றிய அரசாங்கம் , உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களைசட்டத்தின்முன்நிறுத்துவதில் கூட தோல்வியடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.சி.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறியே அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது. குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் குறுகிய காலத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்று கூறப்பட்டது.



ஆனால் தற்போது ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை கூட ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்று பேராயர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தேர்தலின்போது இந்த விடயத்தை அரசியல் இலாபத்திற்காக அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது உண்மையில் அரசாங்கத்தின் தேவையாகக் காணப்பட்டதா? உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் மனைவி இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகிறது. இது தொடர்பில் அரசாங்கம் ஏன் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்காமலுள்ளது?

இவ்வாறிருக்க கொவிட் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். காரணம் இலங்கையின் அந்நிய செலாவணியில் இவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். – என்றார்.

# தேசியப் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்தல் 28 ஆம் திகதியுடன் நிறைவு!

தேசியப் பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளுக்கு 2021ஆம் ஆண்டுக்கான மாணவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாடு கடந்த 28 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாணவர்களை இடைநிலை வகுப்புகளுக்கு இணைப்பதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டாம் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான முறைப்பாடுகளையோ அல்லது வெளி நபர்களினூடாக அச்சுறுத்தல் விடுப்பதையோ தவிர்த்துக் கொள்ளுமாறும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.



# பாட்டும் நானே? பாவமும் நானே!

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் **‘பாட்டும் நானே! பாவமும் நானே!’** என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

**1. கேள்வி:-** யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், பட்டம் பெற்ற சிலருக்குக் கன்னத்தில் தடவிக் கொடுத்தும், சக்கரநாற்காலியில் வந்தவருக்குத் தான் முழங்காலில் நின்றும் பட்டமளித்து நெகிழச் செய்த துணைவேந்தரின் செயலைப் பார்த்தீர்களா?

**பதில்:-** பார்த்தேன். அவரின் மனிதாபிமானத்தைப் பாராட்டத்தான் வேண்டும். நினைவுச்சின்ன உடைப்பில் தேவைக்கதிகமாக நிமிர்ந்து பலரதும் எதிர்ப்பைச் சம்பாதித்தவர், இன்று தேவைக்கதிகமாகப் பணிந்து செல்வாக்குத் தேட நினைக்கிறாரோ என்று எண்ணவும்



தோன்றுகிறது. ஆனால் ஒன்று, எனக்கென்னவோ அவரது அந்த மனிதாபிமானச் செயல்கள் பட்டமளிப்பு மேடையின் தரத்தைக் குறைத்ததாகவே தோன்றுகிறது.

உலகநாதரின் ஒப்பீனியன் * **‘வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இதுதானடா’**

* * * * *

**2. கேள்வி:-** ‘அவர்’ இருதலைக்கொள்ளி’’ எறும்புபோல் தத்தளித்தார்’ என்கிறார்கள். முன்னும் பின்னுமாக இரண்டு தலைகளையுடைய கொள்ளி எறும்பு, அத்தலைகள் வேறு வேறு திசைகளில் இழுக்க, அங்கும் செல்லமுடியாமல் இங்கும் செல்ல முடியாமல் தத்தளிப்பதைப்போல இரண்டு பக்கமும் செல்லமுடியாமல் தத்தளிப்பதனைத்தானே மேற் சொன்ன பழமொழி குறிக்கிறது?

**பதில்:-** சிறுவயதில் நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன். ஆனால் அது பிழை என்று பின்புதான் தெரியவந்தது. கொள்ளி என்ற சொல்லுக்கு நெருப்பைக் கொண்ட விறகு என்பது அகராதி தரும் அர்த்தம். நமது தாய்மார்கள் சமையல் செய்யும் போது நடுவில் துவாரமுள்ள ஒரு விறகை அடுப்பில் வைப்பார்கள். அந்த விறகின் துவாரத்திற்குள் ஒரு எறும்பு நிற்கும். விறகின் ஒரு பக்கத்தை அடுப்பில் வைத்தவர்கள் சிறிது நேரத்தில் அடுப்பை எரிக்கும் அவசரத்தில் அந்த விறகின் மறுமுனையை அடுப்பில் வைத்து விடுவார்கள். இப்பொழுது அந்த விறகின் இரண்டு முனையிலும் நெருப்பு நிற்கும். இரண்டு முனையிலும் நெருப்புப் பற்றிய விறகினைத்தான் இருதலைக் கொள்ளி என்கிறார்கள். இப்பொழுது அவ்விறகின் துவாரத்தினுள் இருந்த எறும்பு விறகின் இருமுனையிலும் நெருப்புப்பற்றி விட்டபடியால் இரண்டு பக்கமும் செல்லமுடியாமல் நடுவில் நின்று தத்தளிக்கும். அதனைத்தான் ‘இருதலைக்கொள்ளி எறும்பு’ என்கிறார்கள். ஒரு பிரச்சினையில் மாட்டிக் கொண்டு இரண்டு பக்கம் போனாலும் ஆபத்துத்தான் என்ற நிலையில் தத்தளிக்கிறவர்களைத்தான் இருதலைக் கொள்ளி எறும்பினை ஒத்தவர்கள் என்று சொல்வது வழக்கம்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **சீனாவிடமும் இந்தியாவிடமும் அகப்பட்டுக் கொண்டு இரண்டு பக்கமும் முழுமையாய்ச் சேரமுடியாமல் தத்தளிக்கும் நம் அரசாங்கத்தை உதாரணமாய்ச் சொல்லலாமோ?**

* * * * *

**3.கேள்வி:-** கொழும்புத்துறைமுக மேற்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவது, முஸ்லிம் மக்களின் ‘ஜனாஸாக்களை’ அடக்கம் செய்ய அனுமதிப்பது, சீனாவிற்கு வழங்கப்பட்ட யாழ்ப்பாணத் தீவுகளைப் பற்றிய முடிவை நிறுத்தி வைத்திருப்பது என நமது அரசாங்கம் பல நல்ல முடிவுகளை எடுக்கத் தொடங்கியிருக்கிறதே?

**பதில்:-** இவையெல்லாம் ஐ.நாவின் மனித உரிமைகள் சபையில் வந்திருக்கும் தமக்கு எதிரான பிரேரணையைத் திசைதிருப்பும் முயற்சிதான் என்பது எல்லோருக்கும் தெரிகிறது. நிமிர்ந்தால் பணியக் கூடாது. பணிவதானால் நிமிரக்கூடாது. முரண்பட்ட இவ்விரண்டு செயல்களாலும் மானம் போகும் என்பது நிச்சயம். இந்தச் சின்ன விடயம் கூட நமது அரசுக்குத் தெரியாதது ஆச்சரியமே. அதிகம் பேசாமல் செயலில் வெற்றிகாணும் இந்தியாவிடம் இவர்கள் நிறையப் படிக்கவேண்டியிருக்கிறது.

உலகநாதரின் ஒப்பீனியன் * **ஊர்ச்சண்டியன் உலகச் சண்டியனுக்குப் பயப்படத்தானே வேணும்!**

* * * * *

**4. கேள்வி:-** ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இம்முறையேனும் ஈழத்தமிழர்க்கு நீதி கிடைக்குமா?

**பதில்:-** சந்தேகமாகத்தான் இருக்கிறது! மனித உரிமைகள் சபை ஆணையாளர், இம்முறையும் ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்கச் செய்யாவிடில் உலக சமுதாயம் தலைகுனியவேண்டிவரும் என்று பேசியிருக்கிறார். போர்க்குற்றம் இழைத்ததாக நமது இராணுவத்தளபதி உட்பட 32 பேர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பிரேரணை நிறைவேறுமாயின் இவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பிழப்பார்கள். மீறிச் சென்றால் இவர்களை எந்த நாடும் கைது செய்யமுடியும் என்று சொல்கிறார்கள். இப்பிரேரணையை ஜேர்மனி உடனேயே ஏற்றுக் கொண்டுவிட்டதாம். வாய்கிழியப் பேசிய பலபேரும் கயிறு இறுக இறுக, வெளியிட்ட தமது வார்த்தைகளை விழுங்கத் தொடங்கியிருக்கிறார்கள். முடிவு இந்



தியாவின் கையில்த்தான் தங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். துறைமுக மேற்கு முனையம் கிடைத்த திருப்தியில் இந்தியா இவ்விடயத்தில் பின் வாங்குமானால் இதுவரை ஈழத்தமிழர்களுக்குச் செய்யப்பட்ட துரோகங்களில் இதுவே மிகப்பெரிய துரோகமாய்க் கருதப்படும். அங்ஙனம் நடந்தால், ஈழத்தமிழர்கள் இனி இந்தியாவைத் தம் தாய்நாடாய்க் கொண்டாட மாட்டார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்.**

* * * * *

**5. கேள்வி:-** ஆங்கிலத்தை விட தமிழ் தாழ்வானதா?

**பதில்:-** எவன் சொன்னவன்? அப்படி யாராவது சொன்னால் அவனைத் தூக்கிக் கடலில் போட வேண்டும். தமிழ்மொழி ஆங்கிலத்தை விட மிக உயர்ந்தது என்பதற்கு ஆயிரம் உதாரணங்கள் சொல்லலாம். இப்போதைக்கு ஒன்றை மட்டும் சொல்கிறேன். தமிழ் எழுத்துக்கள் அவ்வவ் எழுத்துக்களின் ஒலி வடிவையே தம் வரிவடிவின் பெயராய்க் கொண்டிருக்கின்றன.

‘அ’ என்ற வரிவடிவத்தை எழுதுகிற போது அந்த அட்சரத்தின் ஒலிவடிவே அவ்வரிவடிவத்தின் பெயராய் அமைந்திருப்பது தமிழின் தனிச்சிறப்பு. இந்தச் சாதாரண சிறப்பே ஆங்கிலத்திற்கு இல்லை. உதாரணத்திற்கு ஆங்கிலத்தில் W என்ற ஓர் எழுத்து இருக்கிறது. இந்த எழுத்தின் வரிவடிவத்தின் பெயரிற்கும் அந்த எழுத்தின் ஒலி வடிவிற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. why, what, where, weather என்பதான ஆங்கிலச் சொற்களில் வரும் W என்ற எழுத்தின் ஒலி வடிவிற்கும் அதன் வரிவடிவப் பெயரிற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பதை அறிஞர்கள் பலர் சுட்டிக்காட்டுகிறார்கள். இப்படி இன்னும் ஆயிரம் சொல்லலாம்.

உங்கள் தமிழ்தான் சிறந்ததென்றால் இன்றைய உலகியலில் அது ஆங்கிலத்தை வெல்லமுடியாமல் தத்தளிப்பதன் காரணம் என்ன? என்று கேட்பீர்கள். அதைத்தான் ‘ஊழ்’ என்றும் ‘விதி’ என்றும் சொல்கிறார்கள். தகுதி உள்ள பலபேர் தோற்றுப் போக தகுதி இல்லாத பலபேர் வென்று, பதவி வகிப்பதற்கும் இந்த ஊழ் தான் காரணமாம்.

உலகநாதரின் ஒப்பீனியன் * **நம் தமிழ்த் தலைவர்கள் பலர் நாராளுமன்றம் போனதும் அந்த விதியால்தானோ?**

* * * * *

**6. கேள்வி:-** இறந்த முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை கிளிநொச்சி இரணைதீவில் அடக்கம் செய்வதென அரசாங்கம் முடிவு செய்திருப்பது பற்றி?

**பதில்:-** மிகக் கீழ்த்தரமான இராஜதந்திரத்தை அரசு கையாள்கிறது. நடந்து முடிந்த நடைபயணத்தின் போது முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்றதைச் சகிக்க முடியாத அரசு அவர்களுக்குள் ‘மித்திரபேதம்’ செய்யவே இம்முடிவை எடுத்திருக்கிறது. முஸ்லிம்களும் தமிழர்களும் மிக நிதானமாகச் செயற்படவேண்டிய நேரம் இது. அரசின் இம்முடிவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தமிழ்த் தலைவர்கள் முஸ்லிம் மக்களுடைய மனங்களில் எவ்வித காயமும் ஏற்படுத்தாமல் பேசவேண்டும். முஸ்லிம் தலைவர்களும் அரசின் இச்செயலுக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது ஆறுதல் தருகிறது. இன்றைய எமது இலங்கை அரசு, சிங்கள, பௌத்தர்களுக்கு மட்டுமான அரசுதான் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறது. அது இலங்கையின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

உலகநாதரின் ஒப்பீனியன் * **மா புளிக்கிறது அப்பத்திற்கு நல்லதாம்.**


* * * * *

**7. கேள்வி:-** என்றைக்கும் இல்லாமல் இம்முறை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடக்கும் வைபவத்தில் இந்தியப் போர் விமானங்கள் கலந்து கொண்டு சாகசம் செய்வதையும் அதனைப் பேரினத்தாரில் ஒருசிலர் எதிர்ப்பதையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



**பதில்:-** இந்திய விமானங்களின் சாகசங்கள் மட்டுமல்ல. இந்தியாவின் சாகசமும் தொடங்கிவிட்டதோ என





எண்ணத் தோன்றுகிறது. மர்மமுடிச்சுக்கள் விழத் தொடங்கிவிட்டன என்று நினைக்கிறேன். எல்லாம் ஊகம்தான்! உண்மை மெல்ல மெல்லத்தான் வெளிவரும்.

உலகநாதரின் ஒப்பீனியன் * ‘பறக்கும், வந்து பறக்கும் அது பறந்தோடி வரும் தூது’

## நாடு திரும்பிய 33 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த நிலையில் நாடு திரும்பிய 33 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர காலப்பகுதியில், கொரோனா வைரஸ் சோதனை செய்த 384 பேரில், 33 இலங்கையர்களும் அடங்குகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களில் நாட்டுக்கு திரும்பிய ஏராளமான இலங்கையர்கள், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. எனினும் திருப்பி அனுப்பும் பணியைத் தொடர அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் பல நாடுகளிலும் கொரோனா வைரஸ் வகைகள் தொடர்பாகவும் விழிப்புடன் இருப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

மேலும்புலம்பெயர்ந்ததொழிலாளர்களைத் திருப்பி அனுப்பவும் தனிமைப்படுத்தவும் முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

புலம்பெயர்ந்தோரிடமிருந்து வைரஸ் பரவாமல்இருப்பதைஉறுதிசெய்யும்வகையில் இந்த செயல்முறை கட்டமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சமூகத்தின் பல கருத்து முரண்பாடுகளுக்கு அரசின் இருவேறுபட்ட நிலைப்பாடே காரணம்!

## முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டு



மியன்மாரின் ஜனநாயக விரோத இராணுவ அடக்குமுறையில் அந்நாட்டு இளைஞர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

அதிகார மோகமே இதற்கான காரணமாகும், இந்த நிலைமை நாளை இலங்கைக்கும் வந்துவிடக்கூடாது என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் மீது அரசியல் தலையீடுகள் ஏற்பட ஆரம்பித்துவிட்டது, இவ்வாறான நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் நிகழ்கால செயற்பாடுகள், மாகாணசபைத் தேர்தலுக்கான நகர்வுகள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இன்று சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் ஏற்பட்டுள்ளன. சுயாதீனம் என்ற பெயரில் மறைமுகமான அரசியல் அதிகாரமொன்று இயங்கிக்கொண்டுள்ளது.

அதிகார மோகத்தில் செயற்படும் ஒரு சிலர் அரசியல் தலைவர்களின் நோக்கங்களுக்கு இடமளிக்கக் கூடாது.

நீதிமன்ற சுயாதீனம் கூட இன்று பாரிய சவாலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கூடாது.

இது நாட்டின் சுயாதீனத்தை கேள்விக்கு உட்படுத்தும். 20 ஆம் திருத்தத்தை அவசர அவசரமாக கொண்டுவந்து நிறைவேற்றிய சிலருக்குத்தான் இன்று மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவை தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பலமாக குரல் எழுப்ப வேண்டும்.

மியன்மார் இன்று மிக மோசமான ஜனநாயக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயகத்துக்கான புரட்சியில் பலநூறு பேர் இப்போது வரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

அங்கு ஜனநாயக புரட்சி ஒன்று வெடித்துள்ளது. இன்று மியன்மாரில் நடந்துகொண்டிருக்கும் ஜனநாயக விரோத செயற்பாடுகள் நாளை எமது நாட்டிலும் நடந்து விடக்கூடாது. அங்கு கொல்லப்பட்டுவரும் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாவர்.

அங்கு அவ்வாறு ஜனநாயக விரோத செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருப்பதால் இலங்கையிலும் தற்போதைய ஜனாதிபதி அவ்வாறு செயற்படுவார் என கூற முயற்சிக்கவில்லை.

ஆனால் நாளை எதுவேண்டுமானாலும் நடக்கலாம். இன்று இலங்கையின் பயணம் ஆரோக்கியமானதல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது.

20 ஆம் திருத்தம் இந்த நாட்டுக்கு எந்த விதத்திலும் பொருத்தமில்லாத ஒன்றாகும், அதனை ஏன் உருவாக்கினர் என்ற கேள்வி எம்மத்தியில் எழுந்துள்ளது.

இன்று சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் எழ ஆரம்பித்துள்ளன. இன்று அரசாங்கத்தில் இரு வேறுபட்ட கருத்து நிலைப்பாடுகள் எழுந்துள்ளன.

யாரை நம்புவது, யார் உண்மையானவர்கள் எனத் தெரியாத நிலைமை காணப்படுகின்றது. எனவே மக்கள் தெளிவாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

# இரண்டு வயதுக் குழந்தைக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதாக தகவல்!

நாட்டில் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதாக பி.பி.சி. சிங்கள செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரமுகர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தடுப்பூசி வழங்கும் நிலையத்தில், அரசியல்வாதிகளின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பிரமுகர்கள் என பலரும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பிரமுகர்களுக்கான தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் பணியாற்றும் சுகாதார ஊழியர் ஒருவரின் தகவலை அடிப்படையாகக் கொண்டு இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், நாட்டில் வயதானவர்கள் மற்றும் கொரோனாத் தொற்று பரவக்கூடிய ஆபத்து நிறைந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு முழுமையாக தடுப்பூசிகள் வழங்கப்படாத நிலையில், இவ்வாறு பிரமுகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் உதவித் திட்டங்களுக்கு அமைவாக இலவசமாக நாட்டுக்கு கொவிஷீல்ட் தடுப்பூசி கொண்டுவரப்பட்டது.

இதனைத் அடுத்து கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும் எனவும், அதற்கு அடுத்ததாக 30 முதல் 60 வயதுகளுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு சுகாதார அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாகப் பொதுமக்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்ட நிலையில், நாரஹேன்பிட்ட பகுதியில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

இதன்போது, தடுப்பூசிகளை வழங்குவதில் முறையான நடைமுறைகள் செயற்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிட்டு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். மேலும், கொழும்பு புறக் கோட்டைக்கு மரக்கறி கொள்வனவு செய்ய சென்ற ஒருவர், நாரஹேன்பிட்ட பகுதியில் தடுப்பூசி செலுத்தப்படுவதை அவதானித்ததாகவும், அதனைத் தொடர்ந்து தானும் வரிசையில் நின்று தடுப்பூசியை பெற்றுக் கொண்டதாகவும் பி.பி.ஸி. சிங்கள செய்தி சேவைக்கு குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, நாட்டில் முறையான நடைமுறையொன்று இல்லாது வயதை மாத்திரம் அடிப்படையாக கொண்டு தடுப்பூசி வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கிரிபத்கொட பகுதியில் இரண்டு வயது குழந்தைக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கிரிபத்கொட பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய பெண்ணொருவர் பி.பி.ஸி. சிங்கள செய்தி சேவைக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

தனக்கு தெரிந்த ஒருவரின் ஊடாக தான் தடுப்பூசியை பெற்றுக்கொண்டதுடன், தனது இரண்டு வயது குழந்தைக்கும் தடுப்பூசியை செலுத்திக் கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் 18 வயதுக்கு கீழ்ப்பட்ட எந்தவொரு சிறுவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படவில்லை என்பதுடன், உலக சுகாதார ஸ்தாபனம் அது தொடர்பில் தெளிவுபடுத்தல்களையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கொவிஷீல்ட் தடுப்பூசி பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும் போது 18 வயதுக்கும் கீழ்ப்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படக்கூடாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், இலங்கையில் ஒரு நடைமுறைத்திட்டம் இன்றியே கொரோனாத்தடுப்பூசி செலுத்தப்பட்டு வருவதாக பி.பி.ஸி. சிங்கள செய்தி சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

## 24 மணிநேரத்தில் 15 பேர் வீதி விபத்துகளில் சிக்கி பலி



நேற்றுக்காலை6. மணியுடன்நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் வீதி விபத்துக்களில் சிக்கிய 15 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மாத்திரம் பதிவான வீதி விபத்துக்களில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர் எனவும், மற்றைய நால்வர் முன்னதாக ஏற்பட்ட விபத்துக்களில் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர்கள் ஆவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதேவேளை வியாழன் மாத்திரம் நாடு முழுவதும் 120 இற்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அதில் சுமார் 40 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

# உறவுக்கார பெண்ணுடன் வயலுக்கு சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

வவுனியா செட்டிகுளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமடுவ பகுதியில் 7 வயது சிறுவன் ஒருவனின் சடலத்தைப் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை மீட்டுள்ளனர்.

குறித்த சிறுவன் வியாழன் மாலை தனது உறவுக்கார பெண் ஒருவருடன் வயல்பகுதிக்கு சென்றுள்ளார். நீண்ட நேரத்தின் பின்னர் சிறுவன் வீடு சென்றிருப்பார் என்ற எண்ணத்தில் அந்தப் பெண் வீட்டுக்குச் சென்றுள்ளார். எனினும் சிறுவன் வீட்டுக்கு வரவில்லை. பின்னர் பெற்றோர்கள் உறவினர்களால் தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது குறித்த சிறுவன் வயல்பகுதியில் விழுந்து கிடப்பதை அவதானித்த பெற்றோர்கள் அவனை உடனடியாக மீட்டு செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்த்தனர்.

எனினும் குறித்த சிறுவன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முன்னரே மரணமடைந்துள்ளான் என அங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் மருதமடுவ பகுதியைச் சேர்ந்த வீரசிறி தேனுகருக்சான் என்ற 7 வயது சிறுவனே மரணமடைந்துள்ளான். பாம்பு தீண்டி இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# இரணைதீவில் ஜனாஸாக்கள் அடக்கம் தீர்மானத்தை வாபஸ்பெற வேண்டும்!



## மாவை சேனாதிராசா வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 06

இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் தீர்மானத்தை உடனே திரும்பப் பெறவேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

இலங்கையிலும் கொரோனா வைரஸ் தொடர்ந்து தீவிரமடைந்து பரவி வருகிறது. இதனிடையே கொரோனா வைரஸ் நோயால் மரணமடைந்த முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை எங்கே அடக்கம் செய்வதென்பதில் மேலும் குழப்பமான இன, மத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருவதைக் கண்டிக்க வேண்டும்.

முஸ்லிம்களின் ஜனாஸா அடக்கம் செய்யும் பிரச்சினை தீர்ந்து விட்டது. மனித உரிமைப் பேரவை அறிக்கையிலிருந்து இப்பிரச்சினையை நீக்கிவிடுமாறு அரசாங்கம் ஐ.நாவில் கோருகின்றது.

இந்தக் கோரிக்கை, மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பில், முஸ்லிம் நாடுகளின் வாக்குகளைக் கவருவதற்காகும். இந்தமுயற்சி, முஸ்லிம் மக்களையும் நாடுகளையும் ஏமாற்றும் முயற்சியாகும்.

கொரோனாவால் மரணமடைந்த ஜனாஸாக்களை கிளிநொச்சி – பூநகரிப் பிரதேசத்திலுள்ள இரணைதீவில் அடக்கம் செய்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை அங்குள்ள மக்களும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் இஸ்லாமிய மதத் தலைவர்களும்கூட எதிர்த்துப் போராடுகின்றனர்.

கொரோனா வைரஸ் தொடர்பான மருத்துவ நிபுணர் குழுவும் இரணைதீவைக் குறித்துச் சொன்னதாக இல்லை. அக்குழுவின் சிபார்சுகளில் முஸ்லிம் மக்களின் இறப்பு கொரோனாவால் இடம்பெற்றால் ஜனஸாக்களை அந்தந்த இடங்களில் அடக்கம் செய்யலாம் என்றே அறிவித்துள்ளது.

அவ்வாறிருக்க அரசாங்கம் ஏன் இந்தத் தவறான முடிவை எடுத்தது? இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு யாரின் சிபார்சு பெறப்பட்டது?

எனவே, அரசாங்கம் இரணைதீவில் கொரோனா ஜனாஸாக்களை அடக்கம் செய்ய எடுத்த தீர்மானத்தை உடனே திரும்பப் பெறவேண்டும். பதிலாக அரசாங்கம் இஸ்லாமிய மதத் தலைவர்களுடன் கலந்தாலோசித்துப் பொருத்தமான இடங்களில் கொரோனாவால் மரணமடைந்த ஜனாஸாக்களை இஸ்லாமிய மத ஆராதனையுடன் நல்லடக்கம் செய்வதற்கு அறிவிக்க வேண்டும். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## முன்னாள் இராஜந்திரி, ஊடகவியலாளர் பந்துல ஜெயசேகர புற்றுநோயால் மரணம்



சிரேஷ்ட பத்திரிகையாளரும் முன்னாள் தூதருமான பந்துல ஜெயசேகர தனது 60 ஆவது வயதில் காலமானார்.

பந்துல ஜெயசேகர புற்றுநோய் பாதிப்புக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று அதிகாலை காலமானார் என அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

'டெய்லிநியூஸ்'செய்தித்தாளின் ஆசிரியராக இருந்த அவர், சிட்னி, டொராண்டோ, நியூயோர்க்கின் இலங்கைக்கான துணைத் தூதுவராகவும் பணியாற்றியுள்ளார்.

## வைரஸ் ஒழிப்புக்கு முதலாவது முகக்கவசம் உள்ளூர் சந்தைக்கு!

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



பேராதனைப் பல்கலைக்கழகத்தினூடாக வடிவமைக்கப்பட்ட, உலகிலேயே முதலாவது வைரஸ் ஒழிப்பு முகக்கவசம் உள்நாட்டுசந்தையில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இது அறிமுகம் செய்யப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வைரஸை அழிக்கும் குறித்த முகக்கவசத்தை சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு தூதரங்களுடாகக் கலந்துரையாடல்களை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் மறுபரிசீலனை செய்யப்படும்!

## ஐ.நாவுக்குப் பதிலளித்தது இலங்கை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்படவுள்ளதாக, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு அரசாங்கத்தால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் ஆட்சேபனை தெரிவித்து வெளியிட்ட பதில் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முழுமையான பதிலை, இணையத்தில் வெளியிடக்கோரி இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் எழுதியிருந்தது.

இதன்படி, ஐ.நா. வெளியிட்டுள்ள பதிலில், 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு குறித்த ஏற்பாடுகள் தொடரப்படவில்லை என இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டது.

நாடாளுமன்றத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான துறை மேற்பார்வைக் குழு, மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் பொது அமைப்புகள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களின் அடிப்படையில் இந்த நேரத்தில் அத்தகைய சட்டம் தேவையற்றது.

எவ்வாறாயினும், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தின் முன்னேற்றத்துக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறியது.

இந்தச் செயற்பாட்டின் மூலம், பிற அதிகார வரம்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசத்தின் சிறந்த நடைமுறைகளுக்கு உதவுவதாக அரசாங்கம் கூறியது.

அத்துடன், உயர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை சட்டமா அதிபர் மறு ஆய்வு செய்கிறார் என்பதையும் கவனத்தில் கொள்ளலாம். மேலும், தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விரைவாக முடிப்பது தொடர்பாக அரசாங்கம் தனது பதிலில் கூறியது.

இதேவேளை, ஒட்டுமொத்தமாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை தவறான அல்லது ஆதாரமற்ற அல்லது புறம்பான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது என இலங்கை கூறியது.

அத்துடன், பொதுச்சபைத் தீர்மானம் 60/251 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உலகளாவிய பக்கச்சார்பற்ற தன்மை, புறநிலை மற்றும் தெரிவு செய்யப்படாத கொள்கைகளை மனித உரிமைகள் பேரவை மீறுவதாகவும் இலங்கை கூறுகிறது.

மேலும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முன்மொழிவு உட்பட, சர்வதேச மட்டத்தில் பொறுப்புக்கூறல் விடயங்களை முன்னெடுப்பதற்கான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் முன்மொழிவை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது.

இலங்கைக்கு எதிராக இத்தகைய ஏற்றத்தாழ்வான மற்றும்தேவையற்றநடவடிக்கைகளைத்தூண்டுவதற்கு சில காரணிகள் இடைவிடாமல் தொடர்ந்து முயற்சிக்கின்றன. இந்நிலையில், அரசியல் மயமாக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மனித உரிமைகள் பேரவை தன்னை ஈடுபடுத்தியுள்ளதாக இலங்கை வருத்தம் தெரிவிக்கிறது.

மேலும், சர்வதேச மட்டத்திலான எந்தவொரு விருப்பமும், இறையாண்மை கொண்ட நாட்டின் உள்விவகாரங்களில் தேவையற்ற தலையீட்டிற்கு ஒப்பாகும் என்று இலங்கை எச்சரிக்கிறது.

அத்துடன், தனிநபர்கள் அல்லது அதிகாரிகளுக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் மற்றும் பயணத் தடைகளுக்கு அழைப்பு விடுப்பதானது, நீதிமன்றம் அல்லது அமைப்பு ரீதியான ஆதாரம் இல்லாத நிலையிலான முன்மொழிவாகும். இது அவர்களின் உரிமைகளை மீறுதல் மற்றும் இயற்கை நீதிக்கான கொள்கைகளை மீறுதலாகும்.

இதேபோல், ஐ.நா. அமைதி காக்கும் படையில், இலங்கை இராணுவத்தின் ஈடுபாட்டை மறு ஆய்வு செய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையையும் இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது.– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதையல் தோண்டிய குற்றம்: உஹனையில் அறுவர் கைது!

உஹனை பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டுக்காக ஆறு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தனியார் நிலமொன்றில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தமையுடன், அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதானவர்கள் அம்பாறை மற்றும் உஹனை பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இதேவேளை அவர்களை அம்பாறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## மணலின் விலை அதிகரிப்பை தடுக்க புதிய வேலைத்திட்டம்!

மணலின் விலை அதிகரிப்பை தவிர்ப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றை விரைவில் வகுக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியக அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இது தொடர்பில் சுற்றாடல் அமைச்சில் கலந்துரையாடப்பட்டது. தற்போது மன்னம்பிட்டியில் ஒரு டிப்பர் மணல் 14 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனினும், கொழும்பு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களுக்கு இந்த மணலை ஏற்றிச் செல்லும் போது, 65 ஆயிரம் ரூபா வரை விலை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணலை சட்ட விரோதமாக எடுத்துச்செல்லல், மற்றும் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் கூட்டுறவு முறையொன்றை அறிமுகப்படுத்துவது பற்றி இந்தக் கலந்துரையாடலில் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட ஆறு இடங்களில் மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை அடிப்படையாகக் கொண்டு கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மண் அகழ்வு மற்றும் போக்குவரத்துக்கான ஒழுங்குபடுத்தல் செயற்றிட்டம் ஒன்றை இந்த மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையைப் பாரப்படுத்துங்கள்

## கல்முனையில் உண்ணாவிரதப் போராட்டம்




இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்திலும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் கல்முனை, பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத்திடம் நீதி கோரி வடக்கு, கிழக்கில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டங்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரியக்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கமைய கல்முனையில் இன்று ஆரம்பமாகியுள்ள போராட்டத்தில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ச.இராஜன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க அம்பாறை மாவட்டத் தலைவி செல்வராணி, நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் தர்சினி, கல்முனை இளைஞர் சேனை அமைப்பின் பிரதிநிதி பிரதீபன் உள்ளிட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த 3ஆம் திகதி பொத்துவில் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவிருந்த இந்த உணவு தவிர்ப்புப் போராட்டமானது பொலிஸாரால் வழங்கப்பட்ட நீதிமன்றத் தடை உத்தரவையடுத்து தடுத்து நிறுத்தப்பட்டது.

எனினும், பின்னர் திட்டமிட்டபடி இடமாற்றம் செய்யப்பட்டு இன்று போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# வாகன விபத்து ஒருவர் சாவு!

## கொட்டகலையில் சம்பவம்

கொட்டகலை நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் திம்புள்ள – பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்தவியாழக்கிழமை இரவு, கொட்டகலை நகரில் பிரதான வீதியை கடக்க முயற்சித்த நபரொருவர் மீது, லொறியொன்று மோதியுள்ள நிலையிலேயே, இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் கொட்டகலை – வூட்டன் பகுதியைச் சேர்ந்த 78 வயதான ராமசாமி ராஜலிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஹற்றன் திசையிலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த லொறியொன்று, கொட்டகலை வூட்டன் பகுதியில் வீதியை கடக்க முயற்சித்த முதியவர் மீது மோதியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் விபத்தை ஏற்படுத்திய லொறியின் சாரதி, சம்பவ இடத்தை விட்டு தப்பிச் செல்ல முயற்சித்துள்ள நிலையில், பிரதேச மக்கள் லொறியைப் பின் தொடர்ந்துள்ளனர்.

இதன்போது, குறித்த லொறியை பத்தனை சந்தியில் நிறுத்துவதற்கு முயற்சித்த வேளையில் லொறியின் சாரதி, லொறியை மீண்டும் ஹற்றன் நோக்கி செலுத்தியுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் லொறியின் சாரதி, லொறியை கொட்டகலை வைத்தியசாலைக்கு அருகில் நிறுத்திவிட்டு, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த விபத்து, கொட்டகலை நகரின் வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. இவ்வாறு நிறுத்தப்பட்டிருந்த லொறியை, சில தரப்பினர் சேதப்படுத்தியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி, திம்புள்ள – பத்தனை பொலிஸ் நிலையத்தில் பின்னர் சரணடைந்துள்ளமையுடன், அவரை நேற்று நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர்.

# கிழக்கில் இரண்டு உட்பட ஆறு மாவட்டங்களுக்கு நெல் கொள்வனவின்போது முன்னுரிமை அளிப்பு!

போட்டி விலையில் நெல் கொள்வனவு செய்வதற்கான அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் மாதமொன்றுக்கு 2 லட்சம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அதிகாரிகளுக்கு இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 8ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலப்பகுதிக்குள் குறித்த தொகை நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், குறித்த தொகை நெல்லைக் கொள்வனவு செய்வது தொடர்பில் 6 மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அனுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, அம்பாந்தோட்டை மற்றும் குருநாகலை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களுக்கே இவ்வாறு முன்னுரிமை அளிக்குமாறும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். குறித்த பிரதேசங்களில் இருந்து 60 லொறிகள் ஊடாக நாளொன்றுக்கு 6 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாத் தொற்றுடன் 55 மாணவர் பரீட்சையில்

தற்போது நடைபெற்று வரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 55 பரீட்சார்த்திகள் தோற்றி வருகின்றனர் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதுவித பிரச்சினையும் இன்றி நடை பெறுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட 55 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் அபிவிருத்தி செயற்பாடுகள்; பிரதமருக்கு தவிசாளர் அவசர கடிதம்!

மன்னார் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறுகின்ற சில அபிவிருத்தி செயற்பாடுகள், பிரதேச சபையின் அனுமதியின்றியும் பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு வராமலும் இடம்பெற்று வருகின்றமை தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர், அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் பிரதேச சபையின் தவிசாளர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் ஆகிய நான் இப் பிரதேசத்தின் மீது அதீத பற்றுக் கொண்டவன் என்ற வகையிலும் யுத்தத்தின் ஆறாத வடுக்களால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக உழைப்பவன் என்ற வகையிலும் இந்தப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற அபிவிருத்திகளுக்கு முற்று முழுதாக என்னுடைய ஆதரவையும் இந்தப் பிரதேச சபையின் ஆதரவையும் தருவதோடு அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன்.

அத்தோடு இந்தப் பிரதேசத்தில் நடைபெறுகின்ற அபிவிருத்திகளுக்கு பங்களிக்கின்ற அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினூடாக ஒரு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறுகின்ற அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளும் அந்தப் பிரதேச சபையின் அனுமதியுடனேயே நடைபெற வேண்டும் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

அவ்வாறு அனுமதியின்றி நடைபெறுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இந்நாட்டின் சட்டத்தை மதிக்கின்ற ஒரு பிரஜை என்றவகையில் தாங்கள் அனுமதிக்க மாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

எனினும் எமது மன்னார் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறுகின்ற சில அபிவிருத்தி செயற்பாடுகள், எமது அனுமதியின்றியும் எமது கவனத்துக்குக் கொண்டு வராமலும் இடம்பெறுகின்றது.

குறித்த செயற்பாடு தொடர்பாக மிகவும் மனவேதனையுடன் உங்களுக்கு அறியத் தருவதோடு, அவற்றை மேற்கொள்பவர்கள் உங்களுடைய பெயரைப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதையும் உங்கள் கவனத்துக்கு கொண்டுவருகின்றேன்.

இவ்வாறான ஒரு கடிதம் முன்பும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான எந்த நடவடிக்கையும் இன்னும் எடுக்கப்படவில்லை.

எனவே இதனைக் கவனத்தில் கொண்டு இதற்கான மிக விரைவான தீர்வை வழங்குவீர்கள் என்பதை உங்களிடம் எதிர்பார்த்து நிற்கின்றேன்'என அந்தக் கடிதத்தில் அவர், பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## தேனீ வளர்ப்பினை ஆரம்பிப்பதற்கு தேனீக்குடி ஒன்றினை பெற்றுக் கொள்ள முடியுமான விதங்கள்

* குடம் அல்லது பானை ஒன்றினை அல்லது வெற்று மரக்குற்றி ஒன்றினை ஆதாரம் ஒன்றில் வைத்து தேனீக்களை அடையச் செய்தல், தேனீக்கள் அங்கு அடைந்த சில வாரங்களில் அவற்றைப் பிடித்து தேனீப் பெட்டி ஒன்றினுள் இடல் மரப்பொந்து ஒன்றினுள் அல்லது கறையான் புற்று ஒன்றினுள் காணப்படும் தேனீக்களைப் பிடித்து பெட்டி ஒன்றினுள் இடல்.
* தேனீக்குடி திரளாக கலைந்து செல்லும் காலங்களில் கலைந்து செல்லும் தேனீக்குவியல்களினை பிடித்து கொள்ளல்.
* வேறு ஒரு தேனிக்குடியில் இருந்து பிரித்து எடுத்தல்.
* தேனீக்களுடன் கூடிய தேனீப் பெட்டி ஒன்றினை விலைக்கு வாங்கல்.

**Note** - தேனீக்குடிகளை பெட்டிகளில் நிலைப்படுத்தும் போது வதைக் கலங்களிலுள்ள குடம்பிகள் நன்கு வளர்ச்சி அடைவதுடன் போதியளவு உணவுச் சேமிப்புக் காணப்படும் வளர்ச்சிப் பருவமே தேனீக்குடி ஒன்றை பிடித்து நிலைப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானதாகும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir



# இலங்கையின் கழுத்து ஐ.நாவில் நெரிக்கப்பட மஹிந்தவே காரணம்

## சஜித் அணி குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று அரசை வலியுறுத்துகின்றோம்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேசத்துடன் சுமுகமான தொடர்புகளைப் பேணினால் மாத்திரமே சர்வதேச நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் முதன் முதலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே ஐ.நாவிடம் உறுதியளித்தார்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்று அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ – மூன் நாட்டுக்கு வந்தபோது தெரிவித்தார். இதன்போது மஹிந்த ராஜபக்ஷவே அவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அந்த ஒப்பந்தத்துக்கு ஏற்பவே இலங்கையில் உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

எனினும், இலங்கை அதனைச் செய்யவில்லை. இவ்வாறு வழங்கப்பட்ட வாக்குறுதியே இன்று இலங்கையின் கழுத்தை இறுக்கிக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாகவே 2011 – 2014 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. தீர்மானங்களை முன்வைத்தது.

அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க முடியாததன் காரணமாகவே அன்று மஹிந்த ராஜபக்ஷ தேர்தலுக்குச் சென்றார்.

2015இல் நாம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் சர்வதேசத்தைப் பகைத்துக் கொள்ளாமல் சுமுகமான உறவைப் பேணினோம். எம்மால் செய்யக் கூடியவற்றையும், செய்ய முடியாதவற்றையும் தெளிவுபடுத்தினோம்.

போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டபோது, நாம் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

உள்நாட்டு விசாரணைகளின் ஊடாக தீர்வைக் காண்பதாகக் கூறினோம். இதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்தபோது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். எவ்வாறிருப்பினும் பயங்கரவாதத்தை ஒழித்துப் பெற்றுக்கொண்ட வெற்றியை முறையாக சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அரசின் கடமையாகும் – என்றார்.

## இரணைதீவில் ஜனாஸா புதைத்தல் இனி நடக்காது என்கிறார் டக்ளஸ்!

இரணைதீவில் ஜனாஸா புதைக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் இன்று இடம்பெற்ற ஒருங்கிணைப்பு
குழுக் கூட்டத்தில் இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இரணைதீவு மக்கள் சார்பாக கலந்து கொண்ட பிரதிநிதிகளால் இரணைதீவு பிரதேசம் ஓர் பூர்வீக பிரதேசம் என்றும், 30 வருடங்களிற்கு பின்னர் அந்த இடத்திற்கு சென்றபோதும் அங்கே இருப்பிடம் உள்ளிட்ட அடிப் படை வசதிகள் எதுவும் இல்லை, அங்கு பெரும் காடுகளாக காணப்படுகின்றது என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

காடு பற்றிப்போயுள்ள இடங்களை கத்தி, கோடாலி போன்ற ஆயுதங்களை கொண்டு துப்பரவு செய்ய முடியாதுள்ளது. அதனை இயந்திரங்கள் மூலமே துப்பரவு செய்ய வேண்டி உள்ளது. இவ்வாறான வசதி குறைபாடுகள் உள்ள போதும் அந்த பிரதேசத்தில் தொழிலிற்காகவும், பூர்வீக இடத்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் அங்கு சென்றுள்ளோம். இந்த நிலையில் கடந்த இரண்டு நாள்களிற்கு முன்னர் இந்த ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு இரணைதீவை தெரிவு செய்து அங்கே ஆரம்ப வேலைகளை செய்திருக்கின்றனர். இது எங்களிற்கு மனவேதனையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதற் காக நாமும் குரல் கொடுக்கின்றோம். ஆனால் அவர்களின் இடங்களில் அடக்கம் செய்யவேண்டும். இன்றைய தினம், காலைமுதல் இரணைதீவிற்கு செல்வதற்கு கடுமையான தடை களை கடற்படையினர் விதித்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏதோவொரு விதத்தில் இரணைதீவு தெரிவு செய்யப்பட்டிருக்கும் என்று நம்புகின்றேன். இது தொடர்பில் பிரதமர் மற்றும் சம்மந்தப்பட்டவர்களுடன் பேசியிருக்கின்றேன். இந்த பிரதேசத்தில் அடக்கம் நடைபெறாது என்று நம்புகிறேன் என்றார் அவர்.

## பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்காமல் 'ஈஸ்டர்' தாக்குதலுக்குத் தீர்வு காண முடியாது!

### அமைச்சர் வாசுதேவ சுட்டிக்காட்டு

உயிர்த்த ஞாயிறு தினக்குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்காமல் தீர்வு காண முடியாது. – இவ்வாறு நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினக்குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முழுமையற்ற அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

விசாரணை அறிக்கை குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளன குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆளும் தரப்பு உறுப்பினர்களும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள். அறிக்கை குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்குத் தீர்வை முன்வைப்பது அரசின் பொறுப்பாகும்.

உயிர்த்த ஞாயிறு தினக்குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்காமல் தீர்வு காண முடியாது. ஆகவே, இந்த விடயம் குறித்து கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறைபாடுகள் குறித்து ஆராய விசேட பொறிமுறை வகுக்கப்படவேண்டும்என்றதீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மையப் படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதும் அதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் மாற்றுக் கருத்தைத் தெரிவிப்பதும் காணக்கூடியதாக உள்ளது.

வாதப்பிரதிவாதங்கள் கூட்டணிக்குள் தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தும். இந்த விடயம் குறித்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை அனைத்து மக்களும் குறிப்பாக குண்டுத்தாக் குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைய வேண்டும்.

அறிக்கையைக் கொண்டு அரசை விமர்சிக்க முடியாது. அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரணை அறிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன –என்றார்.

# ஐ.நா. பிரேரணை வாக்கெடுப்பில் இலங்கை தோற்றால் பேராபத்து!

## அரசுக்கு எதிர்க்கட்சி பகிரங்க எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 05

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன் வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால் பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

'ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர், இராஜதந்திர ரீதியான நெருக்கடிகளும் எமது யோசனைகளும்' என்ற தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் போர்க்குற்றச்சாட்டுக்களின் கீழ் இலங்கை மீண்டுமொருமுறை வாக்கெடுப்பை எதிர்கொள்ளும் நிலைமைக்கு தற்போது தள்ளப்பட்டிருக்கின்றது.

இலங்கை அதில் வெற்றியடையுமா? அல்லது தோல்வியடையுமா? என்பது குறித்து இப்போது உறுதியாகக் கூற முடியாது. எனினும், இதனைத் தொடர்ந்து எமது நாடு பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது மாத்திரம் தெளிவாக தெரிகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின் போது, இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டது என்ற அடிப்படையிலேயே தற்போதைய யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது. முன்னரும் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. அதில் நாம் தோல்வியடைந்தோம்.

அதனைத் தொடர்ந்து ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்பட்டது. அதன் விளைவாக அதனை மையப்படுத்திய பொருளாதார நடவடிக்கைகள் வீழ்ச்சி யடைந்தன. மீண்டும் அதேபோன்ற தொரு நிலை ஏற்படுமா என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

இதேவேளை, கடந்த 2015ஆம் ஆண்டில் ஆட்சிப்பீடமேறிய அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது டன், அந்தத் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதன் ஊடாக மீண்டும் ஜி.எஸ்.பி வரிச்சலுகையைப் பெற்றுக்கொண்டது.

இந்தநிலையில், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால், மீண்டும் அத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடுமா என்ற கேள்வி இருப்பதுடன் அது நாட்டு மக்கள் அனைவரின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் – என்றார்.

# மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு சுதந்திரக் கட்சி போர்க்கொடி



கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனை யத்தை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

துறைமுகம், விமான நிலையம் ஆகியன தேசிய வளங்களாகும். அவற்றை வெளியாருக்கு வழங்குவதை ஏற்க முடியாது என்று சு.க வின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இந்தியாவின் அதானி நிறுவனத்தின் பங்களிப்புடன், இலங்கை துறைமுக அதிகார சபையுடன் இணைந்து அரச – தனியார் வர்த்தகமாக துறைமுகத்தின் மேற்கு முனையத்தை நிர்மாணித்து அபிவிருத்தி செய்வதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

அரசின் இந்த முடிவுக்கு தேசியவாத அமைப்புகளும், சில தொழிற்சங் கங்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இவ்வாறானதொரு நிலையிலேயே 14 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அரசின் பிரதான பங்காளியான சுதந்திரக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்கும் முடிவுக்குக் கடும் எதிர்ப்புகள் வலுத்ததால் அந்தத் திட்டத்தை அரசு கைவிட்டது. இந்த நிலையிலேயே மேற்கு முனையத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தமிழரின் இருப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் இந்தியா செயற்பட வேண்டும்

## சுரேஷ் க.பிறேமச்சந்திரன் கோரிக்கை



இந்தியா இலங்கைக்கு சகல விடயங்களிலும் விட்டுக்கொடுத்தே செயற்பட்டு வந்துள்ளது. தமிழ் மக்கள் நலன்சார்ந்த விடயத்திலும் அத்தகைய போக்கைக் கடைப்பிடிக்காமல் தமிழ் மக்களின் இருப்பைக் காப்பதற்கும் தாம் விரும்பியபடி தமிழர்கள் கௌரவமாக வாழ்வதற்கும் இந்தியா நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் க. பிறேமச்சந்திரன் ஊடக அறிக்கையின் மூலம் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாகவே இந்தியா செயற்பட்டு வந்துள்ளது. இலங்கையின் முதலாவது சுதந்திர அரசாங்கம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியபோதும் இந்தியா அதனைக் கண்டும் காணாமல் இருந்தது.

அதன் பின்னர் இலங்கைப் பிரதமராகப் பொறுப்பேற்றுக்கொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்க, இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்ற லால்பகதூர் சாஸ்திரியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் ஊடாக பெருமளவான பெருந்தோட்ட தொழிலாளர்களை நாடுகடத்த ஒப்புக்கொண்டனர். இதன் காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்களின் இருப்பு, தனித்துவம், பலம் ஆகியவை கேள்விக்குள்ளாக்கப்பட்டன, அவர்கள் தமது உறவுகளையும் பிரிந்தனர். அதுமட்டுமன்றி எஞ்சியவர்களும்கூட வாக்குரிமையற்றவர்களாகவே நீண்டகாலம் இருந்து வந்தனர்.

லால்பகதூர் சாஸ்திரியின் பின்னர் இந்திராகாந்தி அம்மையார் இந்தியாவின்பிரதமராகப்பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர், இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகவுடனான தனது நட்பை வெளிப்படுத்தும் முகமாகவும் இந்தியாவின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாகவும் கச்சத்தீவை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கினார்.

மேற்கண்ட நடவடிக்கைகள் அனைத்துமே தமிழ் மக்களைப் பாதிப்பனவாக இருந்தும் கூட இந்திய - இலங்கை உறவை சுமுகமாக வைத்துக்கொள்வதற்காக இலங்கையிலிருந்த இந்திய வம்சாவளித் தமிழர்களதோ, இலங்கைத் தமிழர்களதோ அல்லது தமிழகத் தமிழர்களினதோ ஒப்புதல்கள் இல்லாமலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனாலும்கூட, நல்லெண்ண சமிக்ஞைகள் அனைத்தையும் இலங்கை மதித்து நடந்துகொண்டதா என்பது கேள்விக்குறியே. சீன - இந்திய யுத்தத்தின் பொழுதும், பாகிஸ்தான் - இந்திய யுத்தத்தின்போதும் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கையையே இலங்கை அரசு மேற்கொண்டிருந்தது. ஆனாலும்கூட, இந்திய அரசு இலங்கையுடனான தனது உறவை மேம்படுத்துவதில் அவதானமாக இருந்தது.

இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனவினரால் 1971இல் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப்போராட்டத்தின் போது இந்தியா தனது இராணுவத்தை அனுப்பி அதனை ஒடுக்கி இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றியது. அதேபோல் இலங்கை இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் குறிப்பாக சுனாமியின்போது ஏற்பட்ட பேரிழப்புகளின்போது இந்திய அரசின் உதவிகளை இலங்கை ஏற்றுக்கொண்டது. ஆனால் தனது தேவைகள் முடிந்து போனதும் மீண்டும் இந்திய எதிர்ப்பு வாதத்திற்குள் செல்வது இலங்கை அரசின் வழக்கமான ஒன்றாக இருந்து வருகின்றது.

இப்பொழுது அமைச்சரவை அமைச்சர்களும், அரச தரப்பின் முக்கியஸ்தர்களும் ஒருபக்கத்தில் இந்திய அரசாங்கத்தைக்காரசாரமாகவிமர்சித்துக்கொண்டே, ஜெனிவாவில் இந்திய அரசின் ஆதரவை வேண்டிநிற்கின்றார்கள். 137 கோடி மக்களைக் கொண்ட இந்திய நாட்டுக்கு அதன் பாதுகாப்பு என்பது முக்கியமானது. அதனைக்கேள்விக்குஉள்ளாக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் இந்திய விரோதச் செயற்பாடாகவே கருதப்படும்.

இன்று இலங்கை அரசாங்கம் அதனைத்தான் செய்துகொண்டிருக்கின்றது. தனது அண்டை நாடாக இந்தியா இருக்கின்றபோது அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனாவிற்கு வழங்குவதென்பது இந்தியப் பாதுகாப்பிற்கு உகந்ததாக இருக்க முடியாது. என்னதான் இது வர்த்தக நடவடிக்கைகளுக்காகக் கொடுக்கப்பட்டது என்று கூறினாலும்கூட, நீண்ட நோக்கில் சீனா அதனை தனது இராணுவ நடவடிக்கைக்குப் பயன்படுத்த மாட்டாது என்பதற்கு எத்தகைய உத்தரவாதமுமில்லை. இதனைப்போலவேபுதிதாகஉருவாக்கப்பட்டு வரும் துறைமுக நகரத்தின் அரைவாசிப் பகுதியையும் சீன அரசாங்கத்திற்கே தானமாக வழங்கப்பட்டுவிட்டது என்பதும் கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனையத்தை சீனாவிற்கு வழங்கியிருப்பதும், கிழக்கு முனையத்தை இந்தியாவிற்குத் தருவதாகச் சொல்லி பின்னர் மறுத்திருப்பதும் இந்தியாவின் பாதுகாப்புக்கு உகந்த செயல்களாக அமையமாட்டாது. இவை மாத்திரமல்லாமல், இந்தியாவிற்கு மிகவும் அண்மையில் இருக்கக்கூடிய இலங்கைக்குச் சொந்தமான நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியவற்றை மாற்றுமின்சார உற்பத்தியை மேற்கொள்வதற்காக சீனக் கம்பனிக்கு வழங்கியிருப்பதும் இந்தியாவிற்கும் ஈழத் தமிழர்களுக்கும் ஏற்புடைய செயலல்ல.

இவையெல்லாம் வெறும் வர்த்தக நோக்கச்செயற்பாடுகள் என்று இலங்கை அரசாங்கம் கூறிக்கொண்டிருப்பதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை. இவ்வாறான நிலையில்தான், இலங்கை அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தில் தன்னைப் பாதுகாக்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றது.

இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் இந்து பத்திரிகைக்குக் கொடுத்துள்ள நேர்காணலில், இந்தியா தமது அயல்நாடென்றும், அவர்கள் தங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்றும், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் போன்ற தெற்காசிய நாடுகளிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று கூறியிருக்கின்றமையுடன், ஆகவே அவர்கள் எம்மை ஆதரித்தே ஆக வேண்டும் என்ற அடிப்படையில் தமது செவ்வியை வழங்கியது மட்டுமன்றி, தமக்கு ஆதரவு தரும்படி முதன் முதலில் இந்தியப் பிரதமருக்கே கடிதம் எழுதியதாகவும் அதேபோன்று இலங்கை ஜனாதிபதி இது தொடர்பாக இந்தியத் தூதருடனேயே முதன்முதலாகப் பேசினார் என்றும் கூறி இந்தியா ஏதோ தமது பட்டியலில் முன்னுரிமையில் இருப்பதுபோன்ற ஒரு போலி முகத்தைக் காட்ட முயற்சித்துள்ளார்.

மறுபுறத்தில், ஜெனிவாவில் தமது கருத்தை வெளியிட்ட இந்தியத் தூதுவர், இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாயின், தமிழ் மக்கள் சமத்துவமாகவும், கௌரவமாகவும்நடத்தப்படவேண்டுமென்றும், அதற்கு 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார். இதற்கு பதிலளித்துள்ள உள்நாட்டுப் பாதுகாப்புவல்கள் அமைச்சர் இது இந்தியாவினுடைய வழக்கமான புலம்பல் என்று கூறியுள்ளதையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் இப்பொழுது ஆட்சியிலிருக்கும் பௌத்த சிங்கள மேலாதிக்க அரசு, பாரிய சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ ஆக்கிரமிப்புகள், புதிய புதிய பௌத்த விகாரைகளை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளோடு தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கியுள்ள சூழலில், இலங்கை மண்ணில் தமிழ் மக்களின் இருப்பு பாதுகாக்கப்படவேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு, இந்தியா செயற்படவேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம்.

யுத்தத்தில் பல லட்சம் மக்களை நாங்கள் இழந்திருக்கிறோம். ஏறத்தாழ பதினைந்து லட்சம் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சென்றிருக்கிறார்கள். இவ்வாறான ஒரு சூழலில், இலங்கை அரசாங்கத்தினுடைய இனவழிப்பு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமாக இருந்தால், இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தியா செயற்படுவதானது ஏற்புடையதாக அமையாது. மாறாக, தமிழ் மக்களின் அழிவிற்கு ஆதரவளித்ததாகவே இருக்கும்.

இலங்கைத்தமிழ்மக்களைப்பொறுத்தவரையில், இந்தியா எமது அயல்நாடு மாத்திரமல்ல, எமது மொழி, கலாசாரம், பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகிய அனைத்துடனும் நெருக்கமான உறவு கொண்ட தொப்புள்கொடி உறவாகும். அதன் பாதுகாப்பிற்குக் குந்தகமளிக்கும் எத்தகைய நடவடிக்கையையும் தமிழ் மக்கள் ஏற்க மாட்டார்கள். அதே போன்று தமிழ் மக்களின் இன அழிப்பு போன்ற நடவடிக்கைகளில்ஈடுபட்டுவரும் இலங்கை அரசிடமிருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கான முனைப்பான நடவடிக்கைகளையும் இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகள் கடத்தல்; தாய் தற்கொலை!

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட நெல்லிக்காடு, தாந்தாமலை பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

ஏரம்பமூர்த்தி நிஷாந்தி எனும் 37 வயதுடைய தாயொருவரே கடந்த புதன்கிழமை மாலை இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

அண்மையில் உயர்தரப் பிரிவில் பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் இருந்த தனது மகளை அவரின் விருப்பமின்றி அப்பிரதேச இளைஞன் ஒருவர் திருமணம் செய்து கொள்ளும் நோக்கில் கடத்திச் சென்ற நிலையில், சம்பவத்தை நினைத்து மனமுடைந்த நிலையிலேயே குறித்த தாயார் தனது வீட்டில் யாரும் இல்லா நிலையில் இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# சுற்றுலாத்துறை ஊழியர்களுக்கு தடுப்பூசி போடும் பணி ஆரம்பம்!



சுற்றுலாத் துறை ஊழியர்களுக்கும் தடுப்பூசி போட உள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையகம் தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையகத்தின் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ இந்த விடயம் தொடர்பாக கூறியுள்ளவை வருமாறு -

இலங்கை சுற்றுலா நடவடிக்கைகளை மீண்டும் இயல்பாக தொடங்க வேண்டும்.

அதற்கு முதலில் சுற்றுலாத்துறை ஊழியர்களுக்கு, தடுப்பூசிகளை வழங்கும் திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டும். இந்த முன்மொழிவுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும் சுகாதார அமைச்சகத்துடன் இணைந்து சிறப்பு தடுப்பூசி திட்டம் எதிர்வரும் வாரங்களில் தொடங்கப்படும்.

இதேவேளை சுற்றுலாத் துறையின் பங்குதாரர்கள், தற்போது தாங்கள் பதிவுசெய்துள்ள தகவல்களை அனுப்புகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# துப்பாக்கி உரிமங்களை புதுப்பிக்க கால நீடிப்பு!

துப்பாக்கி உரிமங்களை புதுப்பிக்க அறிவிக்கப்பட்ட சலுகை காலம் 2021 மே 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தாமதமாக புதுப்பிக்க விதிக்கப்பட்ட அபராதம் இந்தக்காலகட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படமாட்டாது என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 கட்டுப்பாடுகளின் அடிப்படையில் அந்தந்த மாவட்ட செயலகங்கள் மூலம் துப்பாக்கிகளைப் புதுப்பிக்க முன்னர் அறிவிக்கப்பட்ட சலுகை காலம் பெப்ரவரி 28 வரை மாத்திரமே திகதியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# யுனிசெவ் அமைப்பினால் இலங்கைக்கு 14 லட்சத்து 40 ஆயிரம் தடுப்பூசிகள்!



ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் கொவேக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 14 லட்சத்து நாற்பதாயிரம் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட உள்ளன.

கொவேக்ஸ் என்பது குறைந்த மற்றும் இடைநிலை வருமானங்களை பெறும் 92 நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதற்காக ஐ.நாவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு வேலைத்திட்டமாகும்.

இதன்கீழ் இலங்கைக்கு 14 லட்சத்து 40 ஆயிரம் கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன.

அதன் முதல்கட்டமாக 2 இலட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் நாளை ஞாயிற்றுகிழமை இலங்கை வந்தடையவுள்ளன.

இந்த தடுப்பூசிகள் அபாயகர வலயத்தில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

கொவேக்ஸ் தடுப்பூசி வேலைத் திட்டத்தின் கீழ் யுனிசெவ்வினால் இந்த வருடத்தில் பல நாடுகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 200 கோடி கொரோனாத் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கைக்கு வழங்கப்படும் முதல் கொரோனாத் தடுப்பூசிகள் அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிகள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# மூன்றாவது நாளாகவும் தொடரும் இரணைதீவு மக்களின் போராட்டம்



கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை இரணைதீவுப் பகுதியில் புதைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் மூன்றாவது நாளாகவும் நேற்று போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இரணைதீவுப் பகுதியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களை புதைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 3ஆம் திகதி இரணை மாதா நகர்ப் பகுதி மக்கள் மற்றும் பங்குத் தந்தையர்கள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

எனினும், தொடர்ச்சியாக இரணைதீவுப் பகுதியில் சடலங்களைப் புதைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இன்றும் அப்பகுதி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மற்றும் மீன்பிடி நீர்வள அபிவிருத்தி அமைச்சர் உட்பட பல தரப்பினருக்கும் இரணைதீவு மக்களால் எதிர்ப்பு மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விக்ரமராச்சி சுதேச மருத்துவக் கல்லூரி கம்பஹா பல்கலைக்கழகமாக மாற்றம்!



கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவக் கல்லூரியை பல்கலைக்கழகமாக மாற்றும் அங்குரார்ப்பண விழா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஆயுர்வேத விஞ்ஞானத்தைப் பயிலும் மாணவர்களுக்கு ஆயுர்வேத முறைகள் தொடர்பான கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியாக கற்பிக்கும் நோக்குடன் ஆயுர்வேத சக்கரவர்த்தி பண்டிதர் ஜி.பி.விக்ரமராச்சியால், கம்பஹா சித்தாயுர்வேத கல்லூரி 1929 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. முதல் மாணவர் குழுவில் 20 மாணவர்கள் இருந்தனர்.

மேலும், விக்ரமராச்சி மருத்துவக் கல்லூரி 1995 ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஒரு பல்கலைக்கழக நிறுவனம் என்ற நிலைக்கு தரமுயர்த்தப்பட்டது

தெற்காசிய பிராந்தியத்தில் சுதேச மருத்துவக் கல்வி மத்திய நிலையமாக மேம்படுத்தும் நோக்கத்துடன் 2021 மார்ச் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 'கம்பஹா விக்ரமராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை' என்ற பெயரின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கையின் 16 ஆவது பல்கலைக்கழகமாகும். இதில் சேர்க்கப்பட்டுள்ள புதிய பட்டப்படிப்புகளின் எண்ணிக்கை 07 ஆகும். ஒரு குழுவில் 50 மாணவர்கள் என்ற வகையில் 2021 ஆம் ஆண்டில் 350 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

ஜனாதிபதி, பல்கலைக்கழக இணையத்தளத்தை செயற்படுத்தி பல்கலைக்கழக அதிதிகள் புத்தகத்தில் கையெழுத்திட்டார். உத்தியோகபூர்வ இலட்சினை, கொடி மற்றும் கீதமும் வெளியிடப்பட்டன.

ஜனாதிபதி, பல்கலைக்கழகத்தின் முதல் வேந்தர் மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் கலாநிதி நியங்கொட விஜிதசிறி நாயக்க தேரரிடம் அதற்கான ஆவணத்தை கையளித்தார்.

பல்கலைக்கழக பணிக்குழாமுடன் ஜனாதிபதி குழு புகைப்படத்துக்கும் தோற்றினார். பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் ஜனிதா ஏ.லியனகே, ஜனாதிபதிக்கும் பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருக்கும் நினைவுப் பரிசில்களை வழங்கினார்.

மகா சங்கத்தினர், ஏனைய சமயத் தலைவர்கள், அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர்களான சீதா அரம்பேபொல, லசந்த அலகியவண்ண, சிசிர ஜயகொடி, பாதுகாப்புப் பணிக்குழாம் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, பல்கலைக்கழக வேந்தர்கள், உபவேந்தர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2021 இல் வெளியிடப்பெற்றது.